விலை சதம் 70 ★ ☆ பக்கங்கள் – 10

அருந்துங்கள்!
அணணா கோப்பி
சுவை குன்றுமல்
உடனுக்குடன் அரைத்த
கோப்பியை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

மில்க்வைற் செய்தி இதழ்-59
('பண்பாடும் பண்டிகையும்')
10 மில்க்வைற் நீலசோப்
அல்லது 5 மில்க்வைற் பார்
சோப் அல்லது 2 மில்க்வைற்
சலவைப் பவுடர் மேலுறைகளை
அனுப்பி மேற்படி புதிய செய்தி
இதழைப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 ஐப்பசி 24 ஜுல்ஹஜ் 30 ஞாயிற்றுக்கிழமை (9 –11 –80) இதழ் 270

மதுரையில் தமிழாராய்ச்சி மாநாடு

# கருணாநிதியும் கலந்துகொள்ள

# 'அமிர்' சமரச முயற்சி?

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதம், மதுரையில் நடைபெறவுள்ள ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்துள்ள தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதிக்கும்: முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறைத் தீர்த்துவைத்து, திரு. கருணாநிதியை மாநாட்டில் கலந்துகொள்ளச்செய்யும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் ஈடுபடுவார் என்று தெரியவருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் ஐந்தாவது மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் மதுரையில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டை நடாத்துவதற்கென குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு; அதன் பணிகளை மிகத் துரிதமாகச் செய்து வருகின்றது.

இவ்வேளையில் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனே மாநாட்டை நடத்துவதாகவும் ஆகவே அதில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்றும் திரு. கருணாநிதி அறிவித்திருந்தார். இதற்குப் பதிலளித்த திரு. இராமச்சந்திரன் மக்கள் பணத்தில் நடைபெறும் இம்மாநாட்டை அதற்காக அமைக்கப்பட்ட குழுவே நடாத்துவதாகவும் தெரிவித்ததுடன் திரு. கருணாநிதியை இதில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

சிறந்த தமிழறிஞரும் பேச்சாளருமான திரு. கருணாநிதி இம்மாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் விரும்புவதாகவும்; அவரை இம்மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது,

### தனிநாயகம் அடிகளாருக்கு சிலை

இதே வேளையில் இம்மாநாட்டின்போது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு வித்திட்ட ஈழத்து தமிழறிஞரான வண. தனிநாயகம் அடிகளாரின் நினைவாக மதுரையில் அவரது சிலை ஒன்றும் நிறுவப்படவிருப்பதாக மாநாட்டு அமைப்புக்குழுவின் மக்கள் தொடர்பு பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (கு)

## ஈரான் மாஜி வெளிநாட்டு மந்திரி குதுப்ஷாதே கைது!

தெஹ்ரான், நவ. 8 – ஈரானின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் ஜனப் சாதக் குதுப் ஷாதே நேற்றுப் பிற்பகல் கைதுசெய்யப்பட்டார். ஈரானிய வானொலித் தொலைக்காட்சிச் சேவை விவாதம் ஒன்றில் ஈரானிய ஒலிபரப்புச் சேவையைக் கண்டித்ததை அடுத்தே ஜனப் ஷாதே கைதுசெய்யப்பட்டார் என்றும் இவருடன் விவாதம் ஒன்றில் பங்குபற்றி ஒலிபரப்புச் சேவையைக் கண்டித்த ஈரான் ஒலிபரப்புச் சேவையின் முன்னாள் பிரதி மா அதிபர் டாக்டர் முகமட் முபல்லஹி இஸ்லாமி என்பவரையும் கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரொ)

குலசிங்கம் உருவப்படம்

## பிரதம நீதியரசர் திரைநீக்கம் செய்தார்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட சட்டத்தரணியும் யாழ். சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவருமான அமரர் ஏ. வி. குலசிங்கத்தின் உருவப்படத்தை பிரதம நீதியரசர் திரு. நெவில்சமரக்கோன் நேற்றுமுன்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ். மேல் நீதிமன்ற மண்டபத்தில் யாழ். சட்டத்தரணிகள் சங்க தலைவர் திரு எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைச்சுவாமி யாழ். முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு. வி. மாணிக்கவாசகர், கோப்பாய் எம். பி. திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை, யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் மற்றும் வடபகுதி நீதவான்கள், மேலதிக நீதவான்கள் ஆரம்பநீதிமன்ற நீதவான்கள், யாழ். குடும்பநீதிமன்ற நீதவான், சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர்.

அமரர் குலசிங்கத்தினரின் குடும்பத்தினரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோனை யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தினர் வரவேற்றனர். (க)

## கடையில் சிகரட் கொள்ளை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் உள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஓடு பிரித்து இறங்கி, 15,000 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய சிகரெட் பெட்டிகள் கொள்ளையடிக்கப்பட்டன

இது சம்பந்தமாகப் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஊர்காவற்றுறைப் பொலிசார்: சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

ஊர்காவற்றுறையில் உள்ள சிகரட் ஏஜன்ஸி நிலையமொன்றினுள் சென்ற திருடர்கள், அங்குள்ள பிஸ்கட் வகைகளைச் சாப்பிட்டுவிட்டு குளிர்பானங்களைப் பருகியுமுள்ளனர். (கு)

தீபாவளி இரவில்

## வாள்வெட்டுக்கு இளைஞர் பலி!

### அண்ணனின் உயிர் ஊசலாடுகிறது

(உடுப்பிட்டி-புலோலி)

தீபாவளித் தினத்தன்று இரவு உடுப்பிட்டி சந்தியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் தம்பி பலியானார்; அண்ணன் யாழ். ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை சிங்கராஜா (வயது 27) என்பவரே இச்சம்பவத்தின் போது பலியானார். இவரது அண்ணன் சின்னத்துரை கனகராஜா (வயது 37) ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று சம்பவம் நடைபெற்ற இடத்தில் சிலர் மது போதையில் நின்றதாகவும் ஒருவர் அண்ணனை வெட்ட முயன்றதாகவும் அதனைத்தடுக்க வந்த தம்பி வெட்டப்பட்ட நிலையில் உடலெங்கும் பலத்த காயங்களுடன் ஸ்தலத்திலேயே பலியானார் என்றும் விசாரணையில் தெரியவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ். மகேசன் ஸ்தல விசாரணை நடத்தினார் மரண விசாரணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

வல்வெட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கணேசம, கான்ஸ்டபிள்கள் ஆகியோர் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/–க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

## தவராஜ் — திபகுமாரி

அன்புடையீர்!

நிகழும் ரௌத்திரி வருடம், ஐப்பசி மாதம் 25-ந் திகதி (10-11-80) திங்கட்கிழமை பகல் 12-00 மணி முதல் 1-45 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் திரு. திருமதி தளையசிங்கத்தின் சிரேட்ட புத்திரன் திருநிறை செல்வன் தவராஜுக்கும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சரவணமுத்துவினதும் திருமதி சரவணமுத்துவினதும் சிரேட்ட புத்திரி திருநிறை செல்வி திபகுமாரிக்கும் மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலில் திருமணம் நிகழப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து, புதிய தம்பதிகளுக்கு உங்கள் மனமுவந்த ஆசீர்வாதத்தை அளிக்குமாறு வேண்டுகின்றோம்.

வரவேற்புபசாரம் 10-11-80 மாலை 4-00 மணிக்கு மணமகள் இல்லத்திலும், 11-11-80 மாலை 4-00 மணிக்கு மணமகன் இல்லத்திலும் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

திரு. திருமதி தளையசிங்கம் — 'பஞ்சகிரி' தெல்லிப்பழை.

திருமதி சரவணமுத்து — 'தேவி மந்திரம்' மல்லாகம்.

7290

பருத்தித்துறை நகரசபை

# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல் - 1981

1981-ம் ஆண்டுக்கான குத்தகைக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படும். 1980-11-22-ந் திகதி சனிக்கிழமை அட்டவணையில் குறிப்பிட்ட குத்தகைகள் குறிப்பிட்ட இடங்களில் ஏலவிற்பனை ஆரம்பிக்கப்படும். குத்தகை ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் குறிப்பிட்ட குத்தகைக்குரிய வைப்புப் பணம் 1980-11-20-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் அலுவலகத்தில் செலுத்தி தங்கள் பெயர்களை பதிந்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### அட்டவணை

| விபரம் | ஏலவிற்பனை வைப்பு | ஏலவிற்பனை நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. மரக்கறி சந்தை | 1000/- | மு. ப. 10-00 மணி தொடக்கம் | மரக்கறிச் சந்தை வடக்கு வாசல் |
| 2. வான் வண்டித் தாலை | 500/- | மு. ப. 10-00 மணி தொடக்கம் | ,, |
| 3. மீன் சந்தை | 1000/- | மு. ப. 11-00 மணி தொடக்கம் | மீன் சந்தை நுழை வாசல் |
| 4. மாட்டிறைச்சி கடை இல. 1 | 1000/- | ,, | ,, |
| 5. மாட்டிறைச்சிக் கடை இல. 2 | 1000/- | ,, | ,, |
| 6. ஆட்டிறைச்சிக் கடை | 500/- | ,, | ,, |

ம. வேலும்மயிலும்
தலைவர்,
நகரசபை, பருத்தித்துறை

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
03-11-1980.

7297


# I C M A I A A

## CHARTERED PRELIM

மேற்படி பரீட்சைக்குரிய
போதனா வகுப்புகள் 1980-11-19 புதன்கிழமை
தொடக்கம் ஆரம்பமாகின்றன.
நூல் நிலைய வசதி, நடைமுறைத் தேர்ச்சி
(COUR E WORK I. C. M. A.
ஐந்து பரீட்சைகட்கும் போதனா வகுப்புகள் ஆகியவற்றை
அளிக்கும் ஒரே கல்வி நிறுவனம் இதுவே
விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.
பதிவாளர்,
PERCIVAL HALL
CHAPELS STREET, (7261) JAFFNA.


# வரி விளம்பரம்

## தேவை

பனம்விதை சேகரித்து வைத்திருக்கும் பாடசாலைகள் உடன் தொடர்புகொள்ளவும். 'மில்க் வைற்', யாழ்ப்பாணம். 7298

## விற்பனைக்கு

தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணா பாம், இணுவில். 7289

கச்சேரிக்கு அருகாமையில் உள்ள காட்டுக்கந்தோர்றோட்டில் 2பரப்பு வீடுகட்டக்கூடிய காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் விலாசம்: யோசப் வில்மட், பொற்பதிவீதி, கொச்சுவில் கிழக்கு. 7271

யாழ். புதிய சோனக தெருவில் சகல வசதிகளுடன் கல்வீடு வளவு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: அ. நஜிமணி, 617, ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம். 726

கே. கே. எஸ். றோட் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: செ. தம்பையா. 'வசந்த வில்லா', கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 7291

சகலவசதிகளும் உடைய மேல்மாடிக் கட்டடம் விற்பனைக்குண்டு. 38, மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம். கிழமை நாட்களில் மாலை 5-00 மணிக்குமுன் பார்வையிடலாம். தொடர்பு: க. அப்புத்துரை, 'மலர் இல்லம்' அளவெட்டி தெற்கு, அளவெட்டி. 7277

## வாடகைக்கு

யாழ். வளாகத்துக்கருகில் பரமேஸ்வராச் சந்தியில் உணவுச்சாலை அமைக்கக்கூடிய கட்டிடம் உடனடியாக வாடகைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி.க. தனபாலசிங்கம், 11, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 7294

## பொம்மைவெளியில் மரம்நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதவிஅரசாங்கஅதிபர் பிரிவைச் சேர்ந்த பொம்மைவெளி முஸ்லிம் குடியேற்றத் திட்டத்தில் நேற்று முன்தினம் மாலைநடைபெற்ற மரம்நாட்டு விழாவில் உதவிஅரசாங்க அதிபர் திரு எஸ். கணேஷ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார் கிராமசேவையாளர் எஸ். டொமினிக் மாநகரசபை உறுப்பினர் திரு. ரி, மரியம்பிள்ளை ஜனாப் எம். ஐ. எம். மீரான் முகிதீன் ஆலீம் ஜனாப் எம். ஏ. ஆர். எம். நசீம் ஒஸ்மானியா கல்லூரி அதிபர் மற்றும் மதப்பெரியார்கள் கலந்து கொண்டார்கள் குடும்பத்துக்கு ஒரு மரக்கன்றுகள் வீதம் உதவி அரசாங்க அதிபர் வழங்கினார். இதனுடன் யாழ்ப்பாணம் புதிய சோனகர்தெரு அபிவிருத்தி சங்க வளவில் 15 மரக்கன்றுகளை அதிபர் நாட்டி வைத்தார்.

# திருட்டுக் குற்றத்தை ஏற்றார்; 18 மாதக் கடுங்காவல்

(பண்டத்தரிப்பு)

''இரவு வேளையில் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி ஒருவரின் வீட்டின் ஓட்டைப்பிரித்து உள்ளிறங்கிப் பொருட்களைத் திருடிய குற்றத்தை ஏற்றுக் கொண்ட நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் 18 மாத கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.''

மானிப்பாயிலுள் ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் திரு. எஸ். சுந்தரம்பிள்ளை என்பவரின் வீட்டில் நள்ளிரவு நேரத்தில் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கி பல ஆயிர ...

(10-ம் பக்கம் பார்க்க)

# வீடு வளவு விற்பனைக்கு

மல்லாகம் சந்திக்கு அருகாமையில், காங்கேசன்துறை வீதியில் சகல வசதிகளுடன் பெரிய வீடு (புளிக்கிட்டங்கி) வைரவர்கோயிலுக்கு அடுத்து 4 பரப்புக் காணியில் உடனடியாக விற்பனைக்கு. கூடிய தொகை கோருபவர்க்கு. தரகர் இல்லை.

தொடர்பு: S. S. KASON, Engineer, S, L. B. C. கரம்பே, பாலாவி, புத்தளம்.

7300

பட்டினசபை சங்கானை

நவீனசந்தையில்
1-ம் பகுதிக் கடைகளைக் கொடுப்பதற்கான

# கேள்வி அறிவித்தல்

சங்கானை பட்டினசபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின்மேற்குப்புறமாகப்புதிதாகக்கட்டப்பட்டநவீன சந்தைக் கட்டிட 1-ம் பகுதிக் கடைகளை குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் 10-12-80-ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரத்தினை உள்ளடக்கிய காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நவீன சந்தையின் 1-ம் பகுதிக் கடைகள் — சங்கானை'' எனக் குறிப்பிட்டு சங்கானைப் பட்டினசபையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும், அதே நேரத்தில் யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் இதன் பிரதியொன்று பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

| | மாதாந்த வாடகை | பத்திரப் பணம் | பிணைப் பணம் |
|---|---|---|---|
| நவீன சந்தைக் கடைகள் 7 | 150/- (ஒன்றுக்கு) | 50/- | 200/- |

2. கேள்விகள் மீளளிக்கப்படாத பத்திரப்பணம் ரூபா 50/-ஐயும் மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணம் ரூபா 200/-ஐயும் செலுத்தியதின் மீதும் இச்சபையிடமிருந்து 5-12-80-ந் திகதி வெள்ளிக்கிழமை 3-00 மணி வரை பெற்றுக்கொண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

3. கடை வழங்குதல் மாதாந்த வாடகைக்கு மேலாகக் கடையைப் பெறுவதற்காக கேட்கப்படும் கூடுதல் உரிமைப் பண அடிப்படையிலேயே அமையும். கூடியகேள்விகள் வரிசைக் கிரமப்படி ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி ஏற்றுக்கொள்ளப்படும் கடைக்காரர்களுக்கு அதே வரிசைக் கிரமப்படி அந்தந்த வகைக் கடைகளை தெரிவு செய்யும் உரிமை வழங்கப்படும்.

4. தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கடையில் சங்கானைச் சந்தையில் விற்கப்படும் மரக்கறி வகைகளையோ, இறைச்சி, மீன் போன்றவைகளையோ விற்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

5. சித்தி பெற்ற கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட அன்றைய திகதியிலிருந்து இருவார காலத்துள் அவரது கேள்வியின் குறிக்கப்பட்ட உரிமைப் பணம் முழுவதையும் 3 மாத வாடகைக்கு சமமான தொகையை வைப்புப் பணமாகவும் செலுத்தி, கடையின் குத்தகைக்கு ஓர் உடன்படிக்கையில் ஒப்பமிடல் வேண்டும்.

6. 5-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எந்த நிபந்தனையையாவது பூர்த்தியாக்கத் தவறுபவர்களின் கேள்விப்பணம் பறிமுதல் செய்யப்படும். சித்தி பெற்ற கேள்விக்காரர் செலுத்தப்படும் உரிமைப்பணம் மீளளிக்கப்படமாட்டாததும் சபையின் வருமானத்திற்குரியதும் ஆகும்.

7. யாதொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையோ அல்லது எதனையுமோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு உரிமையுண்டு.

8. கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவர்.

9. இதர விபரங்களையும், நிபந்தனைகளையும் அலுவலக நேரங்களில் இச்சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இராசா. தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
சங்கானைப் பட்டணம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
சாங்கானைப் பட்டணம்,
சங்கானை,
5-11-80.

7286


நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓ! இந்த மனிதர்கள்....

சிங்கை – திவாகரன்

முருகேசனுக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. அவனது மனைவிக்குத் திடீரென்று வலிக்கத் தொடங்கியிருந்தது. வலியென்று சாதாரண வலியல்ல; வாயால் நுரை கக்க வலிக்குமளவிற்குப் பெரியவலி.

''போன கிழமை ஏதோ நாயொன்று கடிச்சதாம். அதை இவள் கவனிக்காமல் விட்டுவிட்டாள். அதுதான் வலிக்குது,'' பக்கத்து வீட்டுக் கனகம் மாமி அங்கு வந்து கூடியிருந்தவர்களுக்கு வலிக்கான காரணத்தை விளக்கிக்கொண்டிருந்தாள்.

''போயும்போயும் அந்தச் சனியன் விழுந்த நாய் இவளைப் பாத்துத்தான் கடிக்க வேணுமா; என்ன? அட அது கடிச்சதுதான் கடிச்சது; இந்தத் தரித்திரம் பிடிப்பாள் அதுக்கு ஆஸ்பத்திரியிலே போய் மருந்து கட்டி ஊசி போடுவிச்சாளோ?..... இப்ப இவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறதெண்டால் கார் பிடிக்கவேணும். வலிக்காரியைக் கார் இல்லாமல் என்னெண்டு கொண்டுபோறது..... ம்..... காருக்கு இருபத்தைந்து ரூபா எண்டாலும் வேணும். அதுக்கு இப்ப ஆரட்டைப் போறது. கையில ஒருசதக் காசுமில்லை. தாக்கூடிய ஆக்களட்டையெல்லாம் வாங்கியாச்சு......'' ம்.....

முருகேசன் ஒன்றுமே செய்யத் தோன்றாமல் கையைப் பிசைந்துகொண்டு நின்றபோது....

என்னடா தம்பி பாத்துக்கொண்டு நிக்கிறாய்; போய்க் கெதியா ஒரு காரைப் பிடிச்சுக்கொண்டு வாறதுக்கு..... இஞ்ச அவள் பொடிச்சிக்கு நல்லா வலிக்குது. நாய் கடிச்ச வலியெண்டால் சும்மா இலேசுப்பட்டதில்லை. அதுவும் கடிச்ச நாய் விசர் நாயோ— என்ன இழவோ ஆருக்குத் தெரியும். போ.....போ..... போய்க் கெதியில வா.....'' என்று அனுதாபத்தோடு அவசரப்படுத்தினார் அவனது பெரியப்பா கதிர்காமர்.

''கார் பிடிக்கிறதுக்கு காசு வேணுமே பெரியப்பா.....'' என்று முருகேசன் இழுக்க.....

''அடடே சொன்னப்போல இப்ப பெற்றோல் விக்கிற விலையில காருக்கு ஊருப்பட்ட காசு கேட்பாங்கள்— ம்..... இப்ப உன்னட்டையும் ஒரு சதமும் இல்லைப்போல இருக்கு. என்னத்திற்கு வீண் செலவு. எல்லாம் விதிப்படி நடக்கும். அது அவ்வளவு பெரிய வலியாத் தெரியேல்லை. இன்னுங் கொஞ்ச நேரத்திலே சரியாப் போம். அட நீ ஒண்டுக்கும் பயப்படாதை. அவளுக்கு ஒண்டும் வராது, நான் ஒருக்கால் —உதிலை விதானை வீட்டுக்குப் போகோணும், போய்ப் பிறகு வாறன்'' ஏதோதோ சமாதானங்களையும், நொண்டிச் சாட்டுகளையும் சொல்லிவிட்டு நைசாக நழுவிச் செல்கிறார் பெரியப்பா என்கிற அந்தப் பெரிய மனிதர். எங்கே முருகேசன் தனனிடம் பணம் கேட்டுவிடுவானோ என்கின்ற பயம் அவருக்கு.

அவரைப் போலவே அங்கு முருகேசனின் வீட்டிற்கு வந்திருந்த ஏனையவர்களும், ஒவ்வொரு சாட்டுக்களைச் சொல்லிவிட்டுக் கலைந்து சென்றார்கள். சற்று முன்னர் வலிக்குக் காரணஞ் சொன்ன பக்கத்து வீட்டுக் கனகம் மாமி கூட, தன்னுடைய புருஷனுக்குத் தோட்டத்திற்குச் சாப்பாடு கொண்டுபோகவேணும் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள். அவளுக்கும் எங்கே செலவு தன்னில் பொறுத்துவிடுமோ என்கின்ற பயம்,

இதில் அவர்களைக் குற்றஞ் சொல்லமுடியாது. அவர்களெல்லாம் ''பணம், பணத்திற்காகவே உறவுகள். பணத்தின் அடிப்படையிலேயே சுகதுக்கங்கள்; பணத்தின் அளவு கோலினாலேயே அனுதாபங்கள்'' என்கின்ற சில குறிப்பிட்ட நியதிகளிலேயே இயங்குகின்ற சராசரி மனிதர்கள் தானே? எனவே குற்றம் முருகேசனுடையது தான். அவன் ஏழையாகப் பிறந்தது குற்றம். அதிலும் இன்னொரு ஏழையைப்பார்த்து திருமணம் செய்துகொண்டது பெரியகுற்றம். பின்னர் மாதம் இருநூறு ரூபா சம்பளத்திற்கு மருந்துக்கடையொன்றில் 'சேல்ஸ்மென்'னாக இருப்பது குற்றம் அவனும் மற்றவர்களைப்போல தர்ம நியாயங்களைக் கடந்து நெளிவு, சுழிவு தெரிந்து நிறையச் சம்பாதிக்கத் தெரிந்து, 'காணி, பூமி. நகை, நட்டு' என்று சேர்த்து வைத்திருந்தால் இப்போது எல்லோரும் அவனது வீட்டில் தங்கியிருந்து மும்முரமாக எல்லா உதவிகளையும் செய்திருப்பார்கள். அவனுடைய பணத்தை குசாலாகச் செலவு செய்து கொண்டு அவனுக்கு உதவி செய்வதாக பாசாங்கு செய்திருப்பார்கள் அதைவிடுத்து ஒட்டாண்டியாக இருப்பவனிடத்தில் அவர்களுக்கு என்ன வேலை?

மனிதனைப்போல ஆறறிவு இல்லாத காக்கைகூட தன் இனத்தில் ஒன்றுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் ஒப்புக்காவது ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்து அழுகின்றது. ஆனால் ஆறும் அறிவான பகுத்தறிவைப்பெற்ற இந்த மனிதர்கள்.........?

இப்போது முருகேசனின் வீட்டில் அவனது வயோதிபத் தாயும், அவனது இரண்டு பிள்ளைகளும் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். மற்றப்படி முருகேசனின் மனைவியின் தாய் தந்தையருக்கு அவள் தங்கள் பேச்சை மீறி முருகேசனைத் திருமணம் செய்துகொண்டு விட்டதால் அவர்களுடன் தீராத பகை. அதனால் பெற்ற மகளுக்கு வலித்துங்கூட அந்தப்பக்கம் வந்து எட்டியும் பார்க்கவில்லை. முருகேசனின் தாய்தான் தனது தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் தனித்து நின்று தன் மருமகளுக்கு தனக்குத்தெரிந்த கை வைத்தியங்களைச் செய்து கொண்டிருந்தாள்.

சற்றுநேரத்தில் வலி சற்றுத் தற்காலிகமாக ஓய்ந்தது. முருகேசன் தன் மனைவியை மெதுவாகத் தூக்கி தனது சைக்கிளில் இருத்தி தாங்கலாகப் பிடித்தவாறு வீட்டிலிருந்து இரண்டுமைல் தொலைவில் உள்ள அரசாங்க வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றான்.

ஆஸ்பத்திரி வாசலில் சைக்கில் வந்துநின்றதும் பழையபடி அந்த வலி வந்துவிட்டது. இப்போது அரசாங்கம் சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்தயிருக்கும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் வந்து அவளைத் தூக்கி 'டெக்சரில்' படுத்தி அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டுசென்றார்கள்.

அங்கு அவசர சிகிச்சைப்பிரிவிலிருந்த டாக்டர் ஒருவர் அவளை உடனடியாகப் பரிசோதித்து சிறு சிகிச்சை செய்துவிட்டு, 'இரண்டு ஊசி மருந்துகள்' உடனே கடையில் வாங்கிவரும்படி' ஒரு துண்டில் குறித்து முருகேசனிடம் கொடுத்தார்.

முருகேசன் அந்த மருந்துச் சிட்டையை விரித்துப் பார்த்தான். இரண்டும் அவசர உயிர்க்காப்பு மருந்துகள். கண்டிப்பாக எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இருக்கவேண்டியவை — இருப்பவை. அப்படிப்பட்ட முக்கியமான மருந்து இந்த ஆஸ்பத்திரியில் மட்டும் இல்லாமற் போனதற்குக் காரணம்.........

சில தினங்களுக்கு முன் அந்த ஆஸ்பத்திரியைச்சேர்ந்த ஊழியரொருவர் அந்தமருந்துகளைக் கொண்டுவந்து தான் வேலை செய்யும் மருந்துக்கடை முதலாளியிடம் கொடுத்துப்பணம் வாங்கியதும், அவைகளை இவன் எடுத்து அலுமாரிகளில் மறைவாக அடுக்கி வைத்ததும்......... முருகேசனுக்குத் தெரிந்த விடயம்.

''இப்போ இந்த இரண்டு மருந்தை வாங்கிறதெண்டால் ஐம்பது ரூபாவாவது வேணும். கார் பிடிக்க ஒரு இருபத்தைந்து ரூபா காசுக்கு வழியில்லாமல் சைக்கில்ல கொண்டுவரேக்கை......... இப்ப மருந்து வாங்க ஐம்பது ரூபாவுக்கு எங்கே போறது. சரி கடை முதலாளியிடமாவது கேட்டுப் பார்ப்பம்'' என எண்ணியவாறு சைக்கிலை எடுத்துக் கொண்டு தான் வேலைசெய்யும் மருந்துக்கடைக்கு விரைந்தான் முருகேசன்.

நேரம் காலை பத்து மணிக்கு மேலாகியும் முருகேசன் கடைக்கு வராததைக் கண்டு ஆத்திரத்தோடு இருந்த மருந்துக்கடை முதலாளி சுந்தரம் முருகேசன் வந்ததும் கடி நாயைப் போல 'வள்' ளென்று விழுந்தார்.

''என்னடா இதுதான் வேலைக்கு வாற நேரமா?''

''இல்லையய்யா என்ரை மனிசிக்கு காலமை திடீரென்று வலி வந்திட்டுது. அவளைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியிலே விட்டுட்டு இப்பத்தான் வாறன். அதுதான் நேரம் செண்டு போச்சு''

''நீ மனிசிக்கு வலி, பிள்ளைக்குக் காச்சல், கொம்மாவுக்குக் குளிர் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு திரிஞ்சால் நான் என்ன இங்கே இருந்து இலையான் கலைக்கிறதே. உங்களுக்கெல்லாம் உப்படி சொல்லிக்கொண்டு திரியிறதுக்கே சம்பளம் தந்து வைச்சிருக்கிறன்.''

''உண்மையிலே ஐயா அவளுக்குச் சரியான வலி. அதுவும் நாய்கடிச்ச வலி. இப்ப இந்த இரண்டு ஊசி மருந்துகளையும் உடனே வாங்கிக் கொண்டுபோய் குடுக்காட்டி அவள் பிழைக்கமாட்டாளாம்......'' என்று சொல்லிப் பொங்கி வந்த துயரத்தை அடக்கிக் கொண்டு முதலாளியிடம் டாக்டரின் மருந்துச் சிட்டையை நீட்டினான் முருகேசன்.

வேண்டா வெறுப்பாக அந்த மருந்துச் சிட்டையை வாங்கிப் பார்த்த சுந்தரம்

''அட இந்த இரண்டு மருந்துக்கும் ஐம்பது ரூபா முடியுமே. உன்னட்டை அவ்வளவு காசு இருக்காதே?'' என்றார் காசைக் குறியாக வைத்த ஒரு போலி அனுதாபத்துடன்.

''என்னட்டை இப்ப அவ்வளவு காசுக்கு வழியில்லை. நீங்கள் இப்ப இந்த இரண்டு மருந்தையும் கடனாகத் தந்திட்டு பிறகு என்ரை சம்பளத்திலே கழியுங்கோ .....'' என்றவாறு கைகளைப் பிசைந்தான் முருகேசன்,

''அட இப்பதான் உதிலை டிஸ்பென்சரி வைச்சிருக்கிற சுந்தாமி டாக்குத்தர் வந்து கிடந்த மருந்துகளை தனக்கு வேணுமெண்டு வாங்கிக் கொண்டு போனார். ஏதோ அவசரமாம் உன்ரை கெட்டகாலம். ஒரு சொஞ்சம் வெள்ளனவா வராதையன். இப்ப என்ன செய்யப் போறாய்?

..........

முதலாளி சொல்லுவது அப்பட்டமான பொய் என்பது முருகேசனுக்கு தெரிந்த ஒன்றுதான். அவர் இப்படி சமயத்திற்குத் தக்கபடி பொய்களை அவிழ்த்து விடுவதில் விண்ணர் என்பது பலகாலமாக அவருடன் இருந்து அனுபவ ரீதி

(7-ம் பக்கம் பார்க்க)

## கடந்த வாரக் கதை

கடந்த வாரம் வெளியான ''கரை காணாத கப்பல்'' என்ற சிறுகதை மிகச் சிறப்பாக இருந்தது.

சமுதாயத்தில் நடக்கும் சம்பவங்களைப் படம் பிடித்துக் காட்டிய கதாசிரியைக்கு என் பாராட்டு. பெண் ஆனாலும் ஆண் ஆனாலும் ஆணவத்தைக் கைவிடுவதுதான் சிறந்தது. இதை இக்கதை நன்றாக எடுத்துக்காட்டியது.

க. சிவசங்கரநாதன்
சரசாலை.


பல பயன் தரும் சென்றிமியூகல் பம்ப்

டெல்டரிக்

பம்ப் செற் ஈ. எஸ். 25 எம்.

கொண்டு குறைந்த செலவில் குழாய் நீர் பெறுங்கள்.

யாப்பானில், கேற்ரே பம்ப் மனுபக்சரிஸ கம்பனி லிமிட்டெட்டினால் இலங்கைக்கென விசேடமாகத் தயாரிக்கப் பெற்ற பம்ப் வெண் கலத்தாலான உற்று கருவ் கொண்டது.



கையிருப்பில் உண்டு ரூ. 1350/-

உறிஞ்சி வீசும் நீர்வாயின் அளவு 1'' அதிகபட்ச மொத்த நீளம் 90 அடி அதிகபட்ச இறைப்பு ஆற்றல் மணிக்கு 1000 கலன். எமது பொறியியல் பகுதி சிறப்பான விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்புச் சேவை வழங்குகிறது. மாற்றுறுப்புகள் யாவும் கைவசமுண்டு

டெல்மேஜ் போசைட் அன்ட் கம்பனி லிமிட்டெட்

மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 93361-7.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காலக்கண்ணாடி

முதுமை ஏற்படுவதை தாமதப்படுத்து வதற்கான முறை ஒன்றை விஞ்ஞானிஒருவர் கண்டுபிடித்துள்ளாராம்.

மனிதன் முதுமையை நோக்கி வளர்ச்சியடையும் வேகத்தைக் குறைப்பதற்கு இது வழிசெய்கிறதாம்.

கிழக்கு ஜேர்மன் விஞ்ஞான பேராசிரியரான பாரன் மான்ஃப் ரெட் வென் அர்டென் என்பவரே இந்த விஞ்ஞானியாவார். சோவியத் அணுகுண்டு தயாரிப்பில் முன்னோடி விஞ்ஞானிகளில் ஒருவராகக் கருதப்படும் இவர் பிராணவாயுவினைக் கொண்டு முதுமையடைவதை வேகங் குறைக்கும் இந்த சிகிச்சை முறையைக் கண்டுபிடித்திருக்கிறாராம்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த சிகிச்சை முறை கண்டுபிடிக்கப்பட்டாலும் ஏற்கனவே 50க்கும் மேற்பட்ட சிகிச்சைநிலையங்களில் பரிசோதிக்கப்பட்டு வெற்றியளித்துள்ளதாம்.

73 வயதான இந்தப் பேராசிரியர் தமது புதிய கண்டுபிடிப்பை தாமே பரீட்சித்துப்பார்த்து வெற்றிகண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

முதுமைக்கு மூலகாரணமாக அமையும் குருதியுடன் பிராணவாயு ஓட்டத்தில் ஏற்படும் குறைபாட்டை இவரது கண்டுபிடிப்பு மாற்றி அமைக்கின்றதாம்.

ஃ ஃ ஃ

சில மாதங்களுக்கு முன்னர் யாழ். போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த நடத்துநர்கள்-ஓட்டுநர்களில் சிறந்தவர்களைத் தெரிவுசெய்து ரோட்டரிக்கழகத்தினர் பரிசுகள் வழங்கினர்.

இந்தப்போட்டி நடந்த சமயத்தில் பதவியிலிருந்த எத்தனை ஊழியர்கள் தொடர்ந்தும் பதவியிலிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. பஸ் நடத்துநர்கள் - ஓட்டுநர்களில் எத்தனைபேர் பிரயாணிகளின் நல்லபிப்பிராயத்துக் குள்ளாகிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமானகாரியம் தான் என்றாலும்—மனிதத் தன்மையோடும் கண்ணியமாகவும் நடந்து பிரயாணிகளின் அன்பையும் பாராட்டையும் பெற்றுக்கொள்ளும் ஊழியர்கள் இல்லையென்று சொல்லிவிடமுடியாது.

ஒருசிலர் செய்யும் காரியங்கள் எல்லாரையுமே குற்றம் சொல்லும்படியாகி விடுகின்றது.

சில ஓட்டுனர்களதும் நடத்துனர்களதும் கெடுபிடிகள் இங்கிதமின்மை போன்ற அவஸ்தைகளைத் தாங்கிக்கொண்டு அமைதியாகப் பயணம் செய்பவர்களில் சிறந்த பிரயாணியைத் தெரிவுசெய்து பரிசளிக்க யாரும் முன்வரமாட்டார்களாவென்று சில சமயம் எண்ணத் தோன்றுவதுண்டு.

ஃ ஃ ஃ

சிறந்த ஒலிபரப்பாளராம் ஆகாசவாணியின் டெல்லி நிலைய தமிழ்ப்பகுதி பொறுப்பாளருமான திருமதி எஸ். தாமாம்பாள் அண்மையில் காலமானார் என்ற செய்தி கவலையளிப்பதாயிருக்கிறது.

அதிகாலைவேளைகளில்தென்னாசிய நாடுகளுக்கான புதுடில்லி தமிழ் ஒலிபரப்பைக் கேட்டு பழகியவர்களுக்கு திருமதி தாமாம்பாளின் குரல் நன்கு பரிச்சயமானது. கர்நாடக இசையில் அவர் சிறந்த வல்லுனரும்கூட. பலவருடங்களுக்கு முன்னர் அவர் இலங்கை வந்திருந்தபோது கொழும்பில்சில கச்சேரிகளும் நிகழ்த்தியது ஞாபகமிருக்கின்றது.

-- பேனா.

# இந்திய சுதந்திர வீரர் வரிசை:

# புரட்சி வீரன் பகத்சிங்!

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம் பாரதம் என்றார். மகாகவி பாரதியார். இந்தஞானபூமியில் பஞ்ச நதிகள் பாயும் பாஞ்சாலம் புகழ் பெற்றது. இந்திரப் பிரஸ்தம் என்ற பெயரில் பாண்டவர்கள் அரசாட்சி புரிந்த நாடு இது. (இதுவே தற்போதைய பஞ்சாப் மாநிலம்) இந்நாட்டைப் பிற் காலத்தில் ரஞ்சித் சிங்போன்ற பேரரசர்கள் ஆண்டனர். தொடர்ந்து சீக்கியப் பேரரசு வலுப்பெற்றுத் திகழ்வதற்குத் துணையாயிருந்தவர்கள் கால்சா சர்தார்கள் என்பவர்கள்.

இவ்வீர மரபின் வழி வந்தவா சர்தார் அர்ச்சுனசிங் என்பவர் இவர் மனைவியின் பெயர் ஜயகவுர். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தன. அவர்களில் இரண்டாவது பிள்ளையான கிஷன் சிங்கின் குமாரனாக 1907 ம் ஆண்டு அக்டோபர் திங்களில் அவதரித்தார் பகத்சிங்.

பாட்டி ஜயகவுர் அம்மையாரின் கண்காணிப்பில் அருமையாக வளர்ந்த பகத்சிங் உரிய பருவத்தில் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றார்!

பகத்சிங் பாடப்புத்தகங்களை மட்டுமின்றி நூல் நிலையங்களிலிருந்து பலதுறை நூல்களையும் நிரம்பப்படித்துப் பொது அறிவைப் பெருக்கிக் கொண்டார்

அயர்லாந்தில் டிவேலராகவும் இத்தாலியில் மாஜனியும் கரிபால்டியும, ரஷ்யாவில் லெனினும் நடத்தி வெற்றி கண்ட புரட்சிகளைக் குறித்த வரலாற்று நூல்கள் பகத்தின் இளம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் போதே பகத்சிங் நாட்டு நடப்பில் ஆர்வம் கொள்ளலானார். முதன் முதல் கான்பூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்குப் போய் வந்தார் பஞ்சாப் புரட்சியினர் கூட்டங்களுக்குச் சென்று செயல் முறைகளைக் கவனித்து வந்தார். வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் ஊர்கள் பலவற்றிற்குச் சென்று மக்கள் நிலையை அறியலானார்.

கான்பூரில் கணேச சங்கர வித்யார் சிங் என்ற காங்கிரஸ் தலைவருடன் ஏற்பட்ட தொடர்பு பகத்சிங்குக்கு அரசியல் தெளிவை அளித்தது.

இதற்கிடையில். காந்தியடிகள் சுதந்திரப் போராட்டத்தை அன்பு முறையில் உண்மையையும், அறத்தையும் கருவிகளாகக் கொண்டு நடத்தத் தொடங்கினார். உலக அரசியல் வரலாற்றிலேயே இல்லாத இப்புதுமையான முறை, புரட்சியுள்ளம் கொண்ட இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்ததால் ஆயிரக்கணக்கானவர்கள் காங்கிரஸில் சேர்ந்தனர். ஆனால் காந்தியடிகள் நடத்திய வரிகொடா இயக்கமும், ஒத்துழையாமைப் போராட்டமும் எதிர்பார்த்த அளவு வெற்றியைத் தராமல் தடைப்பட்டன. விடுதலை வேட்கையில் உணர்ச்சி மிகவும் கொண்டிருந்த இளைஞர்களுக்கு இது பெரிய ஏமாற்றத்தைத் தந்தது.

இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு பஞ்சாப், வங்காளம், சீக்கிய மாகாணம் ஆகிய இடங்களில் இருந்த புரட்சியாளர்கள் ஒன்றுசேர்ந்து இந்தியக் குடியரசுச் சங்கம் என்ற அமைப்பை முன்னரும், இந்திய சோஷலிஸ்டுக் குடியரசுச் சங்கம் என்ற அமைப்பைப் பின்னரும் ஏற்படுத்தி, இளைஞர்களை ஒன்றுதிரட்ட முயன்றனர்.

### வன்முறையில்விருப்பம்

இவர்கள் ஒருபக்கம் ... வேலைகளைச் செய்கிறும் என்று சொல்லிக்கொண்டு, மறுபுறம் துப்பாக்கி' வெடிகுண்டு முதலியவற்றைத் திரட்டுவதற்காகப் படையொன்றையும் ஏற்படுத்தினர் நாட்டு விடுதலையைப் பெறுவதற்கு அண்ணல் காந்தியின் அன்பு முறை ஏற்றதா? புரட்சியாளர்களின் வன்முறை ஏற்றதா என்று பகத்சிங் ஆராயலானார். அன்பு முறையை விட, புரட்சிகரமான செயல்களே இவரது மனதைக் கவர்ந்தன. அதையே பின்பற்ற முடிவுசெய்தார். இம்முடிவு உள்ளத்தில் உருவானதும், பகத்சிங் தாம் நினைத்ததைச் செயல்படுத்துவதற்கான ஓர் அமைப்பாக இந்தியக் குடியரசுச் சங்கத்தைக் கருதினார், 1925ம் ஆண்டில் அச்சங்கத்தின் 'கான்பூர்' நகரக் கிளையில் உறுப்பினராகச் சேர்ந்தார். அங்கே இவருக்குப் "பகவந்த்" என்று மாற்றுப் பெயர் சூட்டப்பட்டது. இப் புனைப் பெயரிலேயே இவர் பல பத்திரிகைகளுக்கு அரசியல் கட்டுரைகளை எழுதினார்.

ஜான்சி என்னுமிடத்தில் இருந்த இதன் மத்திய சங்கம், பகத்சிங்கைப் பிரசாரப்படைக்குத் தலைவராக்கியது. முழு நேரப் பணி புரியும்படியும் கட்டளையிட்டது. 1926ம் ஆண்டில் அடுத்தடுத்து நடந்த காகோரி ரயில் பறிகொள்ளை, லாகூர்ச் சந்தை வெடிகுண்டு வீச்சு நிகழ்ச்சிகள் இவைகளால் புரட்சியாளர் சிலருக்குக் கடுங்காவல் தண்டனையும், மரண தண்டனையும் கிடைத்தன.

### லஜபதிராய் மரணம்

ஏற்கனவே காவலர் கண்காணிப்புக்கு ஆளாயிருந்த பகத்சிங், வெடிகுண்டு வீச்சின் போது சிறைப்படுத்தப்பட்டார். பிறகு பிணையில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலைப் போரில் 1923ம் ஆண்டு காங்கிரஸ் நடத்திய சைமன் குழுவே திரும்பிப்போ! என்ற இயக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. லாகூரில் நடந்த எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஊர்வலத்திற்குத் தலைமைதாங்கிய லாலா லஜபதிராயைக் காவலர்கள் தடியால் அடித்து வீழ்த்தியதினால் அவர் மரணமடைந்தார்.

குடியரசுப் படையினர், காவல்துறையினரைப் பழி வாங்க முடிவெடுத்தனர். அதற்காக ஏவப்பட்ட பகத்சிங் —இராஜகுரு —சந்திரசேகர் ஆகிய மூவரும் திறமையாகச் செயல்புரிந்தனர். ஆனால் பொலிஸ் தலைமைக் காவலர் ஸ்காட் தப்பிவிட்டார். துணைக் காவலர் சாண்டர்சும் உதவிக் காவலர் சான் சிங்கும் இப்புரட்சி இளைஞர்களின் துப்பாக்கிக்கு இலக்காயினர்.

### வேஷம் போட்டு தப்பினர்

இவர்களைத் துரத்தி வந்த காவல் படையின் கண்முன் பாகவே பகத்சிங் அரசாங்க அலுவலர் போலவும், இராஜகுரு பணியாளர் போலவும், சந்திரசேகர் ஒரு நாடோடி போலவும் வேடம் பூண்டு புகைவண்டி வாயிலாகத் தப்பி விட்டனர்.

இந்திய சர்க்கார் டில்லியிலிருந்த மத்திய சட்டசபையில் தொழில் வழக்கு மசோதா என்ற பெயருடன் சட்டம் ஒன்றை இயற்ற முயன்றது. இச்சட்டம் நிறைவேறினால் தொழிலாளர் இயக்கம் நசிந்து போய்விடும் எனக்கருதிய சோஷலிஸ்டு குடியரசாங்கத்தினர் சட்டப் பெருமன்றத்தில் வெடிகுண்டு வீசி அரசாங்கத்தினரை அதிர்ச்சியடையச் செய்ய முடிவு செய்தனர். ... என்ற தோழருடன் சேர்ந்து வெற்றிகரமாகச் செய்தார்.

1929-ம் ஆண்டு தொடக்கத்தில் கட்டுக்காவல் மிகுந்திருந்தும் இருவரும் தந்திரமாக சட்டசபைக்குள் சென்று யார் மீதும் படாமல் இரு வெடி குண்டுகளை வீசினார். பண்டித மாளவியா — மோதிலால் நேரு போன்ற காங்கிரஸ் தலைவர்கள் நிலைகுலையாது நின்றனர். மற்றவர்கள் ஓடி ஒளித்து கொண்டனர். அந்நிலையில் தப்பியோட வசதியும் வாய்ப்பும் இருந்தும் தப்பி ஓடாது இருவருமே காவல் தலைவன் முன் சென்று கோஷமிட்டுக் கொண்டே சரணடைந்தனர்.

### வாக்கு மூலம்

நீதி மன்றத்தில் வெடிகுண்டு வழக்கு விசாரணை நடந்தது. மேலும் பலர் கைது செய்யப் பட்டனர். நீதிபதியின் முன் அவர்கள் தந்த வாக்கு மூலம் கொள்கை விளக்கம் போல் இருந்ததால் அதனை எல்லா பத்திரிகைகளும் வெளியிட்டன. அதன் மூலம் இவர்களைப் பற்றிய செய்திகள் பிற நாடுகளிலும் பரவின.

பகத்சிங் — சுகதேவ் — இராஜகுரு ஆகிய மூவருக்கும் மரண தண்டனை அளிப்பதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அக் கொடிய முடிவைக் கேட்டு பகத்சிங் மனங்கலங்கவில்லை. ஆனால் மக்கள் சீற்றங்கொண்டனர். கண்டனக் கூட்டங்களும் ஊர்வலங்களும் கடையடைப்புக்களும், வேலை நிறுத்தங்களும் நடந்தன. மாணவர்கள் இல்லாததால் பள்ளிகள் கூட மூடப்பட்டன. பொதுமக்களே உயர் நீதிமன்றங்களில் அப்பீல் செய்தனர். மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

### காந்தி கவலை

காந்தியடிகள் தொடக்கத்திலிருந்தே புரட்சியாளர்களின் வன்செயல்களை வரவேற்கவில்லை. ஆனால் பகத்சிங்கின் மனதில் காந்திஜியின் அறிவுரை சிறிதும் பதியவேஇல்லை. காந்திஜியும் பகத்சிங்கின் புரட்சிக்கொள்கையை வெறுத்தார். ஆனால் அவரது நாட்டுப்பற்றைப் பெரிதும் மதித்தார் ஆகவே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்தும் காந்திஜி அரசப்பிரதிநிதியை அணுகி ஆயுள்தண்டனையாக மாற்றுமாறு வேண்டிக்கொண்டார். ஆனால் அரசு இணங்கவில்லை.

இதற்கிடையில் பகத்சிங் பஞ்சாப் ஆளுநருக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் தங்களைத் தூக்கில் தொங்கவிடாமல் இராணுவத்தைக் கொண்டு சுட்டுக் கொல்லுமாறு கேட்டுக்கொண்டார். தாங்கள் பேரரசுக்கு எதிராக உரிமைப்போர் நடத்தியதால் தாங்கள் போர்க் கைதிகள் என்று அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் அரசு மறுத்து விட்டது.

1931ம் ஆண்டு மார்ச்மாதம் 25ந் திகதி விடியற்காலையில் மூவரையும் தூக்கிலிட முடிவு செய்தனர்.

### இரவோடிரவாக......

மரணநாள் நெருங்க நெருங்க மக்களின் ஆர்ப்பாட்டம் அதிகரித்தது. போகிறபோக்கைப் பார்த்தால் மக்களே சிறைக்கூடத்தை உடைத்து அவர்களை வெளியேற்றி விடுவரோ என்றுகூட அரசு பயந்தது!

ஆதலால் மார்ச் 24ம் திகதி இரவு 7-30 மணிக்கு ஒருவருக்குமே தெரியாமல் பகத்சிங்...... இராசகுரு—சுகதேவ் மூவரையும் தூக்கிலிட்டு அந்த இரவிலேயே தகனமும் செய்துவிட்டனர்.

விடியற்காலையில் தூக்கிலிட்டதும் உடலையாவது தரிசிக்கலாம் என்று குளிரையும் பொருட்படுத்தாது வெளியில் காத்திருந்த மக்களுக்கு இது பேரதிர்ச்சியையே அளித்தது! யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை, அவ்வீரர்களின் வீரவாழ்க்கை முடிந்தேவிட்டது.

காந்திஜி— நேரு—பட்டேல்- மாளவியா போன்ற காங்கிரஸ் தலைவர்கள் புரட்சிவீரர்களின் இறுதிச்செய்திகேட்டு கண்ணீர் வடித்தனர்.

நாட்டுப்பற்றுமிக்கமக்களின் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்திருக்கும் அந்த வீரர்களின் வீரநினைவுகள் என்றைக்கும் பசுமையாக நிலைத்திருக்கும் தானே!

## சங்குக் கழுத்துக்கு வந்த மவுசு

— குறமகள் —

I

தாய்;- நீ நாடும் சீசேட்டு பூமேனி எழில் காட்டும்
வாகான மெய்வளைவும் வலப்பாக நெளிந்தாடும்
(தாதல்லா உள்ளாடை தூக்கிக்கூர்
நிமிர்த்தி நிற்கும்
ஆதலினால் அயலார்கண் ஆங்காங்கே சதிராடும்.

II

வாலிபரின் நீள்கண்கள் வலிதான வெறி கொள்ளும்
வேலிகளும் சாலிகளும் வெறுமே தெறித்து விழும்
தாலிகழுத் தேறுமுன்னர் தயவாய் நெறி நிற்பாய்
சேலிகளால் வெம்பாமல் கெட்டியாய் நடந்திடுவாய்.

III

மகள்:- எந்தநூற் றாண்டில்நீ வாழ்கின்றாய் அம்மா
இன்றுலக வழக்கமுன் கண்ணில் தெரியலையோ
மூடிமறைத் ததனால் முற்காலச் சந்ததியார்
தேடிக்கண்டு உணர்வழிந்து தீயனவே செய்தாரே!

IV

சினிமாவில் நாடகத்தில் செப்பரிய காட்சிகளும்
கனிதேர்கஞ் சிகைபலவும் கரவாது காட்டுவதால்
தனியான பயமெதும் தாயே நீ கொள்ளற்க
இனியிவைதான் இயற்கை, எனக்கண்டுமனம்
மரத்தனரே.

V

தாய்:- ஆனாலும் அவன் கண்கள் உன்னையே
பார்த்திடவும்
நானகப் பேசாமல் நயனத்தால் முறைத்திடவே
தானாக எனைப்பார்த்தும் தனியாக
உனைப்பார்த்தும்
ஏனடி அக்கள்வன் மானாக மருண்டானே?

VI

மகள்:- கண்ணுக்குக் கண்ணாடி கட்டாயம்
வேணுமம்மா
விஞ்ஞானம் பேசி விளைசெட்டு நிற்காமல்
இந்நாளில் எதைமனிதர் கண்ணாலே காண
அரியர்?
பொன்னுக்காய் உன்கழுத்தை என்கழுத்தைத்
தான்பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் எழுதும் குறுநாவல்

# பூ நாகம்!

## கோப்பாய் எஸ். சிவம்

(5)

இலுப்பையடிப் பிள்ளையார் கோயிலின் மாலை நேரத்துப் பூசை மணிஓசை கணீர் என்று கிளம்பி, வீசுகின்ற சோளகத்தோடு உறவு கொண்டாடிக்கொண்டு மரங்களிலே உறக்கம்கொள்ள ஆரம்பித்திருந்த புள்ளினங்களைத் திடுக்கிட்டு விழிக்கச் செய்து அவைகளின் சடசடவென்ற இறக்கை ஒலிகளையும் துணை சேர்த்துக்கொண்டு கோப்பாய் கடலின் அருகே மௌனத் தவத்தில் மூழ்கியிருந்த சிங்கனின் காதில் மெல்ல விழுந்து தோய்ந்தது.

மாலைக் கருக்கல், ஒற்றுத்தாழில் ஊற்றிவிட்ட கறுப்பு மை போல இருள் மெல்ல மெல்லப் பரவியது. மாடுகள் நேரம் கடந்துவிட்டதை உணர்ந்து ''அம்பா என்று குரல் கொடுத்துக்கொண்டு தாமாகவே புறப்படத் தொடங்கின. கனத்த மடிகளின் பால் வேதனையும் கன்றின் நினைவும் கலந்து எழத் தம் இஷ்டப்படி நடக்கத் தொடங்கிய மாடுகளைக் கண்டு துடித்துப் பதைத்தபடி எழுந்தான் சிங்கன்.

நடந்து முடிந்துவிட்ட கசப்பான சம்பவங்களை அசை போட்டுக்கொண்டிருந்ததில் தன்னை மறந்துவிட்டதை எண்ணிப் பரபப்போடு மாடுகளை விரட்டினான். வழக்கமாகவே 'குழப்படி' செய்கின்ற 'செங்காரி' பராக்குப் பார்த்தபடி எங்கோ செல்வதை அவதானித்துவிட்டு அதைஅதட்டினான்.

''ஏ பாக்.........'' சொல் தொண்டைக்குள் நிற்க நாக்கைக் கடித்தபடி சுற்றுமுற்றும் பார்த்த அவன் முகத்தில் நாணம் படர்ந்தது. நல்ல வேளை, யாரும் அருகில் இல்லை, நிம்மதியான ஒரு பெருமூச்சு. இதயம் முழுதும் வியாபித்திருந்த அந்த இனிய பெயர் தன் சுயஉணர்வில்லாமலே வாயில் வந்துவிட்டதை வியப்புடன் சிந்தித்தான்.

நேரம் போனது தெரியாமல் சிந்தனை. நெஞ்சில் நிறைந்த நினைவுகள். தான் ஒரேயடியாக மாறிவிட்டதை அவன் மெல்ல உணர்கிறான். இந்த இரண்டு மூன்று நாட்களில் நடந்துவிட்ட காரியங்கள் ..... ?

பாக்கியத்தை நாச்சிமார் கோவிலடி வேப்பமரத்தின் கீழ் சந்தித்தது ..... ஞானமக்காவின் விஷப்பார்வையில் அந்தக் காட்சி துரதிஷ்டவசமாகப் பட நேர்ந்தது ... இதன் பின் ஊரெல்லாம் ஓரளவு கதை பரவியது......... !

சரசம்மாவின் சொந்தக்காரரான சோமையர் மாடுகளின் பாதையையே மாற்றி வைத்தது.....

எருக்கும்பியை இரவோடிரவாக யாரோ அள்ளிவிட்டது..... எல்லாம் அவன் மனத்தில் சுழன்றன. எல்லோரும் எனக்கெதிராக ஒன்றுதிரளுகிறார்களோ? நான் என்ன தவறைச் செய்தேன். ஒருநல்ல பெண்ணின் மேல் புனிதமான அன்பைச் சொரிந்தேன். அவளும் என்னை விரும்புகிறாள். இது நடக்கக்கூடாதகாரியமா?

இப்போது சிலநாட்களாகவே சிங்கன் பழைய சிங்கனாக இல்லை, வழக்கமான உற்சாகமும் துடிப்பும் துள்ளலும் எங்கோ மறைந்துவிட்டன. எப்போதும் அவன் சிந்தனையில் லயித்திருந்தான். உதடுகளை அழகாகக் குவித்து அவன் எழுப்புகின்ற சீழ்க்கை ஒலி இப்போது ஒலிப்பதில்லை.

மாடுகள் இப்போது புதிய பாதைக்குப் பழகிவிட்டன. முரண்டுபண்ணாமல் அவை கடற்கரை பக்கம்போய் மேயத் தொடங்கிவிட்டன, சிங்கனுடைய கண்கள் நீலப்படலையையும். சாளரத்து வெண்ணிலவையும் மறக்கமுயன்று வானத்து நீலப்பட்டில் வெண்முகிற் சன்னல்களூடு தலைநீட்டிப் பார்க்கின்ற நிலவு முகத்தைக் காண்கின்றபோதெல்லாம் அந்த முயற்சியில் தோல்வியுற்றுப் பாக்கியத்தின் நினைவுகளை இதயத் திரையினுள் மூடினான்.

தாழம்பூவென சுகந்தம் வீசுகின்ற அந்த நினைவுகளை மேவி ஊரில் கிளர்ந்த எதிர்ப்புக்கள் பூநாகங்களாக நெளிந்தன. வெள்ளச்சி மீண்டும் வழக்கம் போல் வந்துகொண்டிருந்தது. நீலப்படலை ஒழுங்கையை அதற்குச் சமாந்தரமாக இருந்த இப்போது சிங்கன் மாடுகளைக் கொண்டு செல்லும் ஒழுங்கையுடன் இணைகின்ற ஒரு குச்சொழுங்கை மூலம் வெள்ளச்சியை சரசம்மாள் கொண்டு வந்து மந்தையில் சேர்த்துவிட்டுப் போவாள். சிலவேளைகளில் அந்த ஒழுங்கை மூலையில் இருந்த பூவரசமரத்தில் வெள்ளச்சி கட்டப்பட்டிருக்கும்.

இப்போதெல்லாம் சரசு வழக்கம் போல் சிங்கனிடம் அதிகம் பேசிக்கொள்வதில்லை. மௌனமான ஒரு புன்னகையோடு சரி. சோமையர் சிங்கனின் கண்களில் தட்டுப்படுவதில்லை. சோதியையோ அல்லது பாக்கியத்தின் மற்ற அண்ணன்மாரையோ தெருவில் காண நேர்ந்தால், காணாததுபோல் வேறு புறம் பார்த்துக்கொண்டு மௌனமாகப் போய்விடுவான் சிங்கன்.

சிங்கன் என்ற 'மாட்டுக்காரப் பெடியனுக்கும்' சரசம்மாளின் மகள் பாக்கியத்துக்கும் ஏதோ தொடுப்பாம்'' என்ற கதைகூட இப்போது மெல்ல மெல்லத் தேய்ந்து, பழங் கதையாகிக் கொண்டிருந்தது.

(6)

இரவு முழுவதும் பெய்த மழை அதிகாலையில்தான்சிறிது ஓய்ந்திருந்தது; மரங்களில் இருந்து இன்னும் சொட்டிக் கொண்டிருந்த நீர்த்துளிகள் அதிகாலை வேளையின் சூரியக் கதிர்களில் வெள்ளிக் கட்டிகளாகத் தகதகத்தன.

புழுதி விதைத்தவர்கள் பாடு கொண்டாட்டம். கணக்கான மழை. மற்றவர்கள் தாம் புழுதி விதைக்கவில்லையே என்று சலித்துக்கொண்டனர். உழுது தயாராய், இருந்த வயல்களில், விதைப்பதற்காக ஏர் பூட்டிய எருதுகளும் டிறக்டர்களும் இறங்கி பூமியைக் கிளறத் தொடங்கின. அவற்றின் பின்னால் பூச்சி புழுப் பொறுக்குகின்ற காக்காக்கூட்டம்,

முழக்கம்போல ''ஹப்பி பேர்த்டே'' கொண்டாடும் தமிழ்ப்பிள்ளைகளுக்காக அவரவர் குடும்பத்திலுள்ள அத்தனைபேரையும் இடாப்புக் கூப்பிட்டுக்கொண்டிருந்தார் அன்றைய அறிவிப்பாளர்.

சிங்கன் சரித்துண்டுகளைப் பற்களால் நெரித்தபடி பல் விளக்குவதற்குத் தயாராக கிணற்றடியை நோக்கிப்போய்க்கொண்டிருந்தான். இரவு மழை ஒழுக்கால் குழம்பிய நித்திரை அதிகாலையில் மூடிவிட்டதில் அவன் சற்று தாமதமாகவே எழநேர்ந்தது.

மழை ஈரத்தில் ஒருபக்கப் பேண் சரிவாக இருந்ததால் வழுக்கிக்கொண்டுவந்து ஆடுகால்களுடன் இரகசியம் பேசிக்கொண்டிருந்த துலாவைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்காக சிங்கன் துலாவில் ஏறியபோது வாசற்படலையருகில் சரசு வந்து நிற்பது தெரிகிறது. அவசரம் அவசரமாக சிங்கனின் தாயைக் கூப்பிட்ட அவள் பதட்டத்துடன்

''தங்கமுத்தக்கா, எங்கடை வெள்ளச்சியின்ரை கண்டுக்கு ஒருமாதிரியாய்க் கிடக்கு, சிங்கனை ஒருக்கால் அனுப்பிவிடுறியளோ'' என்று சொல்லி முடித்தபோது, அதை இங்கிருந்தபடியே செவிமடுத்த சிங்கன்,

''ஓ நீங்க போங்கோ நான் பிறத்தாலை வாறன்'' என்று பதில் சொல்லிக் கொண்டு பேண்கட்டையில் நின்று [illegible]

அவசரம் அவசரமாக [illegible]த்தைக் கழுவிக்கொண்டு துண்டைத் தோளில் போட்டபடி ஒழுங்கையில் நடந்த சிங்கனுக்கு நெஞ்சு படக். படக் என்று அடித்தது. சின்னஞ்சிறு வயதிலிருந்து வருடக்கணக்காக நடந்து நடந்து பழகிய அந்த ஒழுங்கையில் சில நாட்கள் காலைவைக்காமல் இருந்துவிட்டு மீண்டும் அதனுள் இறங்கியபோது அவன் உடம்பு புல்லரித்தது.

தினம் தினம் கண்ட நீலப் படலை......... கண்கள் வழக்கம் போல யன்னலில் ஒருகணம் தரித்துவிட்டு ஏமாற்றத்துடன் சுழல..............

வெள்ளச்சியிலும் அதனருகில் மூச்சு இரைத்துக்கொண்டு கிடந்த கண்டிலும் பதிந்துவிட்டபின், அவன் கடமை வீரனாகிறான்.

''இது ஒண்டுமில்லை, ராத்திரி மழைக்குள்ளை நனைஞ்சி சனி பிடிச்சிருக்கு, வேப்பம் புகையடிச்சாச் சரிவரும்.''.

அதையும் அவன் கையாலேயே செய்விக்கும் நோக்கத்துடன் அதற்கான உபகரணங்களை சரசு அவசரமாக அங்குமிங்கும் ஓடிச் சேகரிக்கின்ற அந்த இடைநேரத்தில்..........

கண்டின் நெற்றிப் பொட்டிலே இதமாகத் தடவியபடி குந்திக்கொண்டிருந்த சிங்கனின் பார்வை தற்செயலாக மேலே நிமிர்ந்தபொழுது—

அவன் திகைத்தேவிட்டான். அவனையே பார்த்துக்கொண்டிருந்த கருவிழிகள் படபடத்துக் கீழே தாழ்ந்தபோது அந்த விழியின் கடையில் திரண்டு விழுந்த அந்த முத்துக்களை அவன் காணத் தவறவில்லை. சரேலென அவள் அந்தக் குசினியின் பின்புற வாசலின் வழியாக மறுபடி உள்ளே நுழைந்துவிட்டபொழுது அவள் வெளிவிட்ட அந்த அனல் கக்கும் பெருமூச்சு—

சிங்கனின் இதயத்தில்சாம்பல் பூத்துப்போயிருந்த அந்தக் காதற்கனலை ஊதித்தள்ளிவிட்டது.

பாக்கியம் ஏன் இப்படி மெலிந்துவிட்டாள், அவளுக்கு ஏதாவது வருத்தம் வந்திருக்குமோ..........? இந்த இரண்டொரு வாரங்களுக்குள் அவளில் எத்தனை மாற்றங்கள், முகம் வெளிறிப் பொலிவிழந்து—வழக்கமான மினுமினுப்பும், சிரிப்பும் இல்லாமல் வற்றிப்போயிருந்ததே................

என்னைக்கண்டபோது வழக்கமான மகிழ்ச்சிக்குப் பதிலாக அவள் பார்த்த பார்வை.......... அதில் திரண்ட அந்தக் கண்ணீர்...........

அவனை அந்தப்பார்வை என்னவோ செய்தது. 'ஓ'வென்று கத்தியழவேண்டும் போலிருந்தது. அந்தப் பார்வையில் மறைந்திருந்த தாபம் —ஏக்கம்—துயரம்—ஏமாற்றம் இத்தனையும் கலந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு..............

சரசம்மாள் கொண்டுவந்த பொருட்கள் அவனை மறுபடி மாட்டு வைத்தியத்தில் இணைத்துவிட மௌனமாக அவன் கைகள் இயங்குகின்றன.

உள்ளே வேண்டுமென்றே நனைந்த தேங்காய் மட்டையை அடுப்பினுள் புகுத்திப் புகையவிட்டுக் கண்களைக் கசக்கியபடி..........

பாக்கியம் அழவில்லை; புகையில் கண்கலங்குகிறது. அன்றைக்கு நீண்ட நாட்களின் பின் தனது சிங்காசனத்தில் அமர்ந்திருந்தான் சிங்கன். நாச்சிமார்குடியிருக்கும் அந்த வெண்ணாவல் மரம் வழமைபோல் ஓங்கி உயர்ந்து நின்றது. கீழே அந்த அப்பாவி நாகதம்பிரான் இரவுபெய்த மழையில் அபிஷேகமாகி இப்போது எறிக்கின்ற வெயில்கிரணங்களால் துவட்டப்பட்டுக் காட்சிதருகின்றார். வேப்பமரம் தாழம் பற்றை யாவும் வழமை போலவே அமைந்திருக்கின்றன.

சிங்கன் மட்டும் அந்தத் தாழம்பற்றையை வெறித்தபடி நீண்ட பெருமூச்சுக்களை எறிந்துகொண்டிருக்கிறான். தூரத்தில் வயல்களில் விதைப்புக்கான ஆயத்தங்கள் நடக்கின்றன.

சிங்கனின் நினைவுகள் பாக்கியத்தைத் தழுவுகின்றன. பாக்கியம் தன்னை மறக்கவில்லை - மறக்கவிரும்பவில்லை- மறக்கவே மாட்டாள் என்பதை அவன் புரிந்துகொள்கிறான். காய்ந்துபோன தன் வாழ்க்கையில் மலரும் தாழம்பூவை எட்டிப் பறித்துவிட நீளுகிற கரங்கள் பல. அவன் மௌனமாக விலகிப்போகத்தான் முயன்றான். ஆனால்இப்போது தாழம்பூவில் இருந்து பூநாகம் மறுபடி மெல்லத்தலை நீட்டியது. பறிக்கவரும் கரங்களை தடுத்துவிடும் நோக்கத்தோடு சீறியது. பழைய நினைவுகள்படமெடுத்தாடுகின்றன.

## கோப்பாய் சிவம்



'பூநாகம்' குறுநாவலை இந்தவாரம் இளைஞர் கோப்பாய் சிவம் தொடர்கிறார். சிவானந்த சர்மா என்னும் இயற்பெயர் உடைய இவர் கோப்பாய் வடக்கில் வசிப்பவர். நாவல் சிறுகதை, மரபுக் கவிதை, புதுக்கவிதை, வானொலி நாடகம், மெல்லிசைப்பாடல்கள், சமயக்கட்டுரைகள் என்பன எழுதிப் புகழ்பெற்றவர். 7 வருடமாக அம்புஜம் என்ற கையேட்டை நடத்திவந்தவர். அன்னை பராசக்தீ, கனவுப்பூக்கள் ஆகிய புத்தகங்களின் ஆசிரியர். அண்மையில் மணமானவர். கதிர்வெல நீர்ப்பாசனக் காரியாலயத்தில் படவரைஞராக பணி புரிகிறார்.

## பேனா நண்பர் தேவையாம்

கொரியாவிலிருந்து ஆசிரியை செல்வி அன்-சூன் கிம் என்பவர் பேனா நண்பர்கள் கோரி விடுக்கப்பட்டிருந்த கோரிக்கை, கடந்த வாரம் வெளியாகியிருந்ததல்லவா. அந்த முகவரி தெளிவாக இல்லையெனப் பலர் அறிவித்திருந்ததால் அதனை மீண்டும் இங்கு தருகின்றோம்.

Miss An-Soon Kim,
Central Po. Box 8365,
SEOUL, KOREA.

கோழிப் பண்ணையில் இலாபம் பெற
டயமிக்ஸ்
டயமிக்ஸ் - அமெரிக்காவில் டயமன்ட் ஷம்ரொக் ஸ்தாபனத்தினால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட பெறுமதிமிக்க இத் தீனி உயர்ரக விட்டமின்களும் தாதுப்பொருள்களும் கொண்டது. விலையோ சகாயம்.
முட்டைக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 20/90
குஞ்சுக் கோழி ஆரம்பத் தீன்,
இறைச்சிக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 21/90
25 கிலோ கிராம் பைகளிலும் கிடைக்கும்
இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்
மாஸ்டர் ஃபீட்ஸ் லிமிட்டெட்
30, ஃபிறேஸர் அவனியூ, தெஹிவளை. தொலைபேசி: 071-5123
இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.
டயமிக்ஸ்—இலாபம் தரும் கோழிப்பண்ணைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உனக்கு நீயே ஒளியாய் இரு!

## ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் உரைகளும் விளக்கங்களும்

(தற்பொழுது உலகில் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் தத்துவ மகாஞானிகளில் ஒருவரான திரு. ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி இப்பொழுது இலங்கைவந்திருக்கிறார். அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.)

உலகம் தோன்றிய காலம் தொட்டு மனித சமுதாயங்களிடையே ஞானிகளும் தத்துவ மேதைகளும் தோன்றிய வண்ணமே இருக்கிறார்கள்.

இவர்களில் சிலர் தமக்கு முன்னிருந்தவர்கள் கூறியவைகளை விரிவுபடுத்தி விளக்குபவர்களாகவும், பின்பற்றுபவர்களாகவுமே இருந்துள்ளார்கள்.

தனித்துவமான புதிய சிந்தனைகளை வெளியிட்ட சிலரும் கூட புதிய சமயங்களைத் தோற்றுவிப்பவர்களாகவும், ஏற்கனவே இருந்த சமயங்களிலிருந்து பிரிந்து செல்லும் புதிய பிரிவுகளைத் தோற்றுவிப்பவர்களுமாகவுமே இருந்துள்ளனர்.

ஆனால் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்களும் விளக்கங்களும் ஏனைய சமய ஞானிகளிலிருந்து வேறுபட்டதாகவும் எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றன.

''உனக்கு நீயே ஒளியாய் இரு'' என்பதுஅவர்உபதேசம். இதனைச் செவிமடுப்பவர்கள் தமது அறிவுப் போக்கில் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்று கூறப்படுகின்றது.

இவர் எந்த ஒரு சமயத்தையோ சமயப் பிரிவையோ இனத்தையோ நாட்டையோ சேர்ந்தவரல்லர்.

ஸ்ரீ ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி தமது சுதந்திர சிந்தனைப் போக்கு பற்றி பின்வரும் அம்சங்களை வலியுறுத்துகின்றார்.

'ஜீவகீதம்' என்ற தமது குறிப்புரையில் அவர் கூறுவதாவது:

எனக்குத் தரிப்பிடமில்லை. நான் ஓடும் நீரைப்போன்றவன். இருள் தெய்வங்களைப்போன்று எனக்கு சரணாலயங்களில்லை. நீண்டுகிடக்கும் ஆலய நிழல்களிலும் நான் தரித்திருப்பதில்லை. எனக்கென்று புனித நூல்கள் கிடையா.

மரபு வழியில் நான் நன்கு பழக்கப்பட்டவனுமில்லை. கோட்பாடுகள் கட்டுப்பாடுகளில்லை. நம்பிக்கைகளினால் பீடிக்கப்பட்டவனுமல்ல. சமயக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டவனுமல்ல. போதகர்களினால் ஆட்படுத்தப்பட்டவனுமல்ல. தத்துவச் சிக்கல்களுமில்லை. மதப்பிரிவுகளின் அதிகாரத்துக்குட்பட்டவனுமல்ல.

நான் J. கிருஷ்ணமூர்த்தி— அவ்வளவே.!

தென்னிந்தியாவில் மதனபள்ளி என்ற இடத்தில் 1895-ம் ஆண்டு மே. 11-ம் திகதி பிறந்தார், ஒரு பிராமணக்குடும்பத்தில் இவர் எட்டாவது குழந்தையாவார்.

சிறுவயதிலேயே இவருக்கிருந்த அறிவையும் மேதா விலாசத்தையும் கண்ட பிரம்ம ஞான சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரும், லீட் பீட்டர் என்பாரும் தந்தையாரின் அனுமதியோடு இங்கிலாந்துக்குக் கூட்டிச் சென்று கல்வியளித்தனர். விசேஷ ஏற்பாட்டின் மீது இவருக்கு தனிப்பட்ட ஆசிரியர்கள் மூலம் விசேஷ கல்வியூட்டப்பட்டது.

### ஆத்மீகத் தெளிவு

1911-ம் ஆண்டு டாக்டர் அன்னிபெசன்ட் ''ஓர்டர் ஒவ் த ஸ்டார்'' என்றொரு சர்வதேச ஆத்மீக இயக்கத்தை ஆரம்பித்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை அதன் தலைவராகவும் ஏனையவர்களை அவரின் சீடர்களாகவும் நியமித்தார். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கானோர் இந்த இயக்கத்தில் சேர்ந்தார்கள்.

1927-ம் ஆண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஆத்மீகத் தெளிவு நிலை அடைந்தார். இது உலக வாழ்வு பற்றிய இவரது நோக்கத்தில் மகத்தான மாறுதலை ஏற்படுத்தியது.

ஆத்மீக ஸ்தாபனங்களின் பயனற்ற தன்மையை அவர் உணரலானார். இதன் காரணமாக 18 ஆண்டுகளாக இயங்கி வந்த இயக்கத்தை கலைத்து விட்டார்.

அதன் பின்னர் அவர் பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டு வரலானார்.

''த ஓடர் ஒவ் த ஸ்ரார்'' என்ற தமது ஸ்தாபனத்தைக் கலைத்த வேளையில் அவர் நிகழ்த்திய உரையில் ஒருபகுதி வருமாறு:

''சத்தியம் என்பது பாதையில்லாத ஒரு நிலப்பகுதியென நான் கருதுகிறேன். அதை எந்த ஒருவழியாலும் நீங்கள் அடைய முடியாது. எந்த ஒரு சமயத்தின் மூலமும் பிரிவுகள் மூலமும் முடியாது. உண்மை என்பது எல்லையற்றது. வரையறையில்லாதது. எந்த ஒரு பாதையாலும் அடையமுடியாதது.


ஆன்ம ஈடேற்றத்தை நோக்கி எந்த ஒரு ஸ்தாபனத்தினாலும் மனிதனை இட்டுச் செல்ல முடியாது என்று நான் நம்புகிறேன்.....

ஒருவரை நீங்கள் பின்பற்ற ஆரம்பிப்பீர்களானால் உண்மையை நோக்கிச் செல்வதிலிருந்து நீங்கள் விலகிவருகின்றீர்கள்' நான் சொல்வதற்குச் செவிமடுக்கின்றீர்களா என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. உலகில் ஒரு காரியத்தை நான் செய்ய விரும்புகின்றேன். மனிதனை விடுதலையடையச் செய்வதிலேயே என்நோக்கமிருக்கிறது. எல்லாவித சிறைக் கூடுகள், அச்சங்களிலிருந்தும் அவனை விடுதலை செய்ய விரும்புகின்றேன். புதிய மதத்தை, பிரிவை, உருவாக்கவோ, புதிய கோட்பாடுகள், தத்துவங்களை வலியுறுத்தவுமில்லை எனக்குச் சீடர்கள் இல்லை; அப்போஸ்தலர்கள் இல்லை.......''

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இதுவரை எந்த ஒரு சமய நூலையும் படித்ததில்லையாம். தத்துவம், உளவியல் சம்பந்தமான நூல்களையும் அவர் படித்ததில்லை. அக ஒளியின் மூலம் சொற்பெருக்காற்றும் அவர், தமது கருத்துக்களுக்குச் சிறப்பான விளக்கமும் தருகிறார்.

'பேனு'

## சூரிய சக்தியால் குடிதண்ணீர் சுத்திகரிப்பு



தண்ணீரை வடிக்குச் சுத்திகரித்த குடிதண்ணீராக மாற்றுவதற்குஎளிமையான முறையில் அமைந்த சூரிய வடிகலன் பயன்படுகிறது.

இந்த வடிகலன் மழை காலத்தில் மழை நீரைச் சேகரிப்பதற்கு உதவுகிறது. எட்டுமணி நேரம் தொடர்ந்து சூரியவெளிச்சம் கிடைக்கும்போது இது தினசரி சராசரி மூன்று லிட்டர் சுத்திகரித்த தண்ணீரை உற்பத்திசெய்யும்.

ஓர் ஓடாவியால் இந்த வடிகலனைச் சொற்பநேரத்தில் தயாரிக்க முடியும். பலகை, கண்ணாடி, பிளாஸ்டிக், செம்புக்குழாய், வர்ணம், ஆணிகள், திருகாணிகள் ஆகியன மட்டுமே இதற்குத் தேவை.

உவர்நீரை நன்னீராக மாற்றவும், மழை நீரைத் திரட்டிச் சேகரிக்கவும் இது உதவுகிறது.

வெளிச்சம் ஊடுருவிச் செல்லக்கூடியவகையில் வடிகலனின் மேற்பகுதி அமைந்துள்ளது. இது சூரிய ஒளியின் வெப்பத்தை வெளியேறவிடாமல்பிடித்துவைத்துக்கொள்ள உதவுகிறது.

வெப்பம் தண்ணீரை நீராவியாக மாற்றி மேலே எழச் செய்கிறது. அப்போது அசுத்தங்கள் தண்ணீரில் இருந்து பிரிந்து தங்கிவிடுகின்றன. நீராவி உச்சிவரை சென்ற, உட்பகுதியில் திரண்டு, பக்கவாட்டில் அமைந்த உட்புற நீர்க்கால்களின் வழியாகக் கீழ்நோக்கி ஓடுகிறது. வெளிப்புற நீர்க்கால்கள் மழைநீரைச் சேகரிக்கின்றன. சேகரிக்கப்பட்ட தண்ணீரும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரும் வடிகலனுக்கு வெளியே திரட்டி வைக்கப்படும்.

## பச்சை விளக்கு!

'மாலி'

கடந்த ஆண்டு நல்லூர் தீர்த்தோற்சவ தினம்: அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஓர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வாழ்விலே மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாக அது இருக்கும்.

இளம் பாடகி ஒருவரின் அற்புதமான சங்கீதத்தைக் கேட்டு பிரமிப்பும் மகிழ்ச்சியும் கொண்ட நாள் அது.

அரங்கினுள் பிரவேசித்த போது அவர் ஆலாபனை செய்துகொண்டிருந்த அந்தக் கல்யாணி இராகமும். ''உன் தரிசனம் கிடைக்குமோ நடராஜா, தயாநிதே'' என்று அடுத்துவந்த பல்லவியும், மீரா பஜன்களும், கடைசியாக ''சரண கமலாலயத்தை.........'' திருப்புகழும்......... அடடா எப்படிச் சொல்வது அதை?

'அவருடைய காலத்திலே, இன்று எம். எஸ்., டி. கே. பி.. எம். எல். வி. போன்று அப்படி ஒரு வரிசையிலே இந்தப் பிரமிளாவும் அமர்வார், என்று சொன்னபோது அதை அப்போது சிலர் எப்படி நினைத்தார்களோ.....?

ஆனால் கடந்த மாதத்து கடைசி 'கல்கி' இதழைப் பார்த்தபோது, இந்த நினைவுகளையெல்லாம் அசைமீட்க வைத்து, அதிலே ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

இந்த பிரமிளாவை 'தேச உடைமை ஆக்குங்கள்' என்று தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள்!

தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்ற பாரதிவிழாவில் இவருடைய பாடலைக் கேட்ட பின்னர் [illegible] க்கை எழுப்பப்பட்டிருக்கிறது! டி.கே. சண்முகத்தின் புதல்வரான டி. கே. எஸ். கலைவாணன், புதல்வி திருமதி மனோன்மணி சங்கர், பாரதியாரின் கொள்ளுப்பேரரான வி. ராஜ்குமார் ஆகியோருடன் பிரமீளாவும் சேர்ந்து ஓர் இசை நிகழ்ச்சியை இந்த விழாவிலே அளித்திருக்கிறார்கள், பாரதியார் பாடல்களைக்கொண்டு தொகுக்கப்பட்டிருக்கிறது இந் நிகழ்ச்சி.

இந்நால்வரையும் பாரதி நூற்றாண்டினையொட்டி 3 அல்லது 4 வருடங்களுக்கு தமிழக அரசு சுவீகரித்துக்கொண்டு விடவேண்டும். இவர்களை ஊர் ஊராக அனுப்பவேண்டும். அந்தந்த ஊர்களுக்கு அரசு சுற்றறிக்கையும் அனுப்பி. பள்ளிகளில் கல்லூரிகளில், பொதுமக்கள் அரங்குகளிலெல்லாம் இவர்களது பாரதிபாடல் நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்.

இதைத் தமிழக அரசு நிறைவேற்றுவது பாரதிக்கு அல்ல பாரதத்துக்கு செய்யும் சிறந்த சேவை என்று 'கல்கி'யில் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

செல்வி பிரமிளா ஓர் இலங்கையர். இலங்கை வானொலியில் முன்னர் தமிழ்ச்சேவை, கல்விச்சேவை ஆகியவற்றில் பணிப்பாளராகவிருந்ததிருமதி மோனியின் புதல்வி! இப்போது இந்தியாவிலேயே பெற்றோருடன் தங்கியிருக்கிறார்.

இலங்கையிலே கே.கே. அன்ரனி, விஜயலட்சுமி சண்முகம் பிள்ளை முதலானோரிடம் பயின்ற பிரமிளா, பின்னர் மூசிரி சுப்பிரமணிய ஐயர், முடிகொண்டான் வேங்கடராமையர் முதலியோரிடமெல்லாம் பயின்றவர்.

குயின்மேரி கல்லூரியில் இந்திய சங்கீதத்திலான எம். ஏ. பட்டத்தையும்; சென்னைப்பல்கலைக்கழகத்தில் இந்திய தத்துவத்துறையிலான எம். ஏ. பட்டத்தையும் பெற்றவர்.

இப்போது இசைத்துறையிலான 'கலாநிதி' பட்டத்துக்காகக் காத்திருக்கிறார். அதற்காக இவர் சமர்ப்பித்துள்ள ஆய்வுக்கட்டுரை 'கதாகாலாக்ஷேபம்' பற்றியது.

திருவையாறு தியாகராஜ உற்சவம், தமிழிசைச் சங்கம் மியூசிக் அக்கடமி. இந்தியன் பைன் ஆட்ஸ் ஆகியவற்றின் இசை விழாக்களிலும் பல தடவைகளில் பாடியிருக்கிறார்.

'புற தாக்கங்களின் பாதிப்பு' இன்றி, திறமைக்கு மதிப்பும் ஊக்கமும் அளிக்கப்பட்டால்; பிரபல்யமும், சிறப்பும், தனித்துவமும் வாய்ந்தோர் வரிசையில் இன்று நம்மை மகிழ்விக்கும் இந்த பிரமீளா, அந்த வரிசையில் ஓர் இடத்தையும், அவர் தனக்கென்று பெற்றுக் கொள்வார் என்பதில் சந்தேகமே இல்லை.

அதற்கான ஒரு 'பச்சை விளக்கு'.; 'கட்டியம்' என்றே 'கல்கி'யின் செய்தியைக் கொள்வோமா?

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாடக மேதை சங்கரதாஸ் சுவாமிகள்

**தமிழ் நாடகக் கலைக்கு உயிரூட்டியவரென்று போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவுதினம் இம்மாதம் 13ம் திகதி வருகின்றது. அதையொட்டி வெளியிடப்படும் இக்கட்டுரையில் சுவாமிகள் பற்றிய பல சுவையான தகவல்கள் தரப்பட்டுள்ளன. சுவாமிகள் எழுதிய இசைநாடகங்களை இலங்கையிலும் பலர்பாடி ஆடி நடித்துப் புகழ்பெற்று நிகழ்வது குறிப்பிடத்தக்கது.**

### இணுவையூர் சிரம்பரதிருச்செந்திநாதன்

சமீபகால நாடகக் கலையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர்தான் சங்கரதாஸ் சுவாமிகள். அவர் நாடகக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் ஏராளம்; நாடக உலகம்மாத்திரம் அல்ல தமிழ் இலக்கிய உலகமே போற்ற வேண்டியவர் அவர் என்று கூறுவார்கள்.

ஆனால் சங்கரதாஸ் சுவாமிகளைப்பற்றி அனேகம்பேர் அறிந்திருக்கவில்லை. ''1922ம் ஆண்டுவரை எம்மிடையே வாழ்ந்து மறைந்த தமிழ்நாடகத் தலைமையாசிரியர் ஒருவருடைய பெயர் தமிழ்மக்கள் மனத்திலே நின்று நிலவும் அளவுக்கு நன்கு விளம்பரப்படுத்தப்படவில்லை'' என்று டி. கே. சண்முகம் அவர்கள் தனது நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## நாடகக்காரர்

டி. கே. சண்முகத்தின்வேதனைக்குப் பதில் அளிப்பது போல் அமைந்துள்ளது பிரபல நகைச்சுவை நடிகரான டி. என். சிவதாணுவின் கூற்று

''நாடகக்காரர்கள் என்றால் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்கள் என்று கேவலமாக நினைத்துவந்த காலத்தில் தமிழ்ப்பேரறிஞர்கள். புலவர்கள் வரிசையில் முதலிடம் வகித்த சுவாமிகள் நாடகக்கலைக்குப் பணிசெய்ய முற்பட்டதனாலோ என்னவோ நாடகக்காரன்தானே என்று அவரை புலவர்கள் பாராட்ட மறந்துவிட்டார்கள் என்று ஐயுற வேண்டியுள்ளது'' என்கிறார்.

சங்கரதாஸ் சுவாமிகளின பெருமையினை நாம் அறிய வேண்டுமானால் சமீபகாலமாக புகழ்பெற்ற கலைஞர்களை நோக்கவேண்டும்.

சுவாமிகள் ஆரம்பித்து நடத்திய பல நாடகக்குழுவின் மூலமாக பயிற்சிபெற்றோர் பட்டியலில் எஸ். ஜீ. கிட்டப்பா, மதுரை இசைப்புலவர் மாரியப்ப சுவாமிகள், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், கே. சாரங்கபாணி, நடிகவேள் எம். ஆர். ராதா, டி. பி. பொன்னுசாமிப்பிள்ளை, டி. கே. பகவதி, டி. கே. சண்முகம் ஆகியோர் இடம்பெற்றிருப்பதில் இருந்து தெரிகின்றது.

நாடகக்கலை வளர்ச்சியின் ஒருநூற்றாண்டு வரலாற்றை எடுத்துப் பார்த்தால் இலக்கியத்தரமுடையனவாகவும், நாடகக்கலைக்கு சிறப்புத் தருவனவாகவும் இருப்பது ஒரு சில நாடகங்கள்தான் என்று சொல்லப்படுகின்றது.

காரணம்: அக்கால நாடக ஆசிரியர்களுக்கு இலக்கியப் புலமை ஒருசிறிதும் கிடையாது. அதனால் புராண இதிகாசக் கதைகளையும், ஐம்பெருங்காப்பியக் கதைகளையும் நன்றாக விளங்கிக்கொள்ளாமல் தங்களுக்கு தோன்றியபடியெல்லாம் எழுதினார்கள் என்று பலர் குற்றஞ்சாட்டினார்கள்.

சிலப்பதிகாரத் தலைவி கண்ணகியை கர்ணகியாவும், நல்ல புராண இதிகாசப் பாத்திரங்களான நல்லதங்காள், நளதமயந்தி, அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி முதலியவைகளைக் கண்டபடி வேடம் மாற்றியும் நாடகங்கள் பல தெருக்கூத்துகள் போல நடந்து வந்ததே அந்த குற்றச்சாட்டுக்கு காரணமாகும் என்றுகருதப்படுகின்றது. இந்தக் கூடாத பெயரை தம்முடைய பெரும் புலமையாலும், தெய்வ பக்தியாலும் போக்கியவர் சங்கரதாஸ் சுவாமிகள் என்று நாரண - துரைக்கண்ணன் அவர்கள் கூறுகின்றார்.

சங்கரதாஸ் சுவாமிகள் ஒரு நாடக ஆசிரியர், நடிகர் அதோடு தலைசிறந்த புலவர் தன்னுடைய நாடகங்களுக்கு இனிமையான இசைப் பாடல்களை அவரே அமைப்பார்.

அவர் சங்ககால இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள் இதிகாசங்கள், பிரபந்தங்கள் போன்றவற்றையும் கற்று சிறப்படைந்தவர்.

திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், மகாபரதம், மற்றும் புராணங்களில் உள்ள நல்ல கருத்துக்களையும் அவருடைய நாடகங்களில் காணலாம். என்று சொல்லப்படுகின்றது. சதி அனுசூயா, சீமந்தனி, கோவலன், அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, போன்ற அவரது நாடகங்களின் சிறப்பை அறிஞர்கள் பலர் இப்போதும் போற்றுகின்றார்கள்.

சுவாமிகள் போன்ற நல்ல இலக்கியப் புலமையும், இசைஞானமும் உடையோர் நாடக உலகில் சிலர்தான் இருந்தனர். இராம நாடகம் சண்டி இராஜா நாடகம் முதலிய நாடகங்களை இயற்றி நாடகக் கலையை வளப்படுத்திப் மருங்காபுரி சமஸ்தான வித்துவான் முத்தமிழாகாரம் ஏகை சிவசண்முகம்பிள்ளை உடுமலை சந்தச்சரபமுத்து சாமிக்கவிராயர் ஆகியோர் சுவாமிகள் காலத்தவர்கள்.

## சுவமிகளின் மொழி பெயர்ப்பு

மகாகவி ஷேக்ஸ்பியரின் ரோமியோ யூலியட் போன்ற நாடகங்களை பல ஆண்டுகளுக்கு முன்னர் தமிழில் மொழி பெயர்த்து நடக்கச் செய்தவர் சங்கரதாஸ் சுவாமிகளாகும். ''பார்ஸி'' மொழியில் நடிக்கப்பட்ட ''தால்லீச்சு'' போன்ற நாடகங்களையும் சுவை குன்றாமல் தமிழ் மக்களுக்கு கொடுத்தவர் சுவாமிகள்தான்.

நாடக ஆசிரியராகி, பாடல் புனைபவராகி புலமைபெற்று விளங்கிய அவர் நடிப்புத் துறையிலும் சிறப்புடன் திகழ்ந்தார்,

எமன், இரணியன், சனீஸ் சுரபகவான், காளபைரவர், கடோத்கஜன் முதலிய பல தாப்பட்ட வேடங்களில் சுவாமிகள் நடித்துப் பாராட்டு பெற்றிருக்கின்றார்.

## எமன் வேடத்தில் . . .

சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் அவர் எமன் வேடந்தாங்கி நடித்தார். ஒரு காட்சியில் கையிலிருந்த சூலாயுதத்தை ஆவேசத்துடன் தரையில் அடித்தாராம். அதன் விளைவாக நாடகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த ஒரு தாய்க்கு கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டதாம். அதன் பிறகு சுவாமிகள் எமன் வேடம் தாங்கி வருகின்றார் என்றால் கர்ப்பமான பெண்களை அரங்கை விட்டு வெளியேறுமாறு அறிவிப்புக் கொடுப்பது வழக்கம்.

சுவாமிகள் —சரப்பட்ட பாத்திரமாகிவிடுவதே இதற்குக் காரணம். நடிக்கும்போது அவர் உணர்ச்சிப் பிளம்பாகவே காணப்படுவாராம்.

இரணியனாகி —பிரகலாதன் நாடகத்தில் நடித்தபோது, பிரகலாதனாக நடித்த சிறுவனைத் தமது வலது கையால் தூக்கிக் கீழே எறிந்து கர்ஜித்தாராம். நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பெண்களில் ஒருத்தி, ''ஐயோ —பாவி குழந்தையை —கொன்றுவிட்டானே'' என்று கூறி மயங்கி வீழ்ந்தார்.

## சனீஸ்வரன்

நளன் தமயந்தி நாடகத்தில் சனீஸ்வரன் வேடம்பூண்டவர் சுவாமிகள். ஒரு நாள் நாடகம் முடிந்த பின்னர், அதிகாலை மெல்லிய இருட்டில் கிணற்றடிக்குக் குளிக்கப் போனார்.

நல்ல தோற்றமுடையவர், நாடகத்துக்காக உடல் முழுதும் கறுப்பினைப் பூசியிருந்தார். மெல்லிருட்டில் அவரைக் கண்ட பெண்ணொருத்தி, பயந்து மாரடைப்பினால் அந்த இடத்திலேயே காலமானார்.

அவரிடம் பயின்ற நடிகர்கள் ஏராளம். தன்னிடம் பயிலுகின்ற நடிகர்கள், சொல்லிக்கொடுத்தபடி நடிக்காமல். தமது எண்ணப்படி நடிக்கவும், பேசவும் தொடங்கியதைக் கண்டு சுவாமிகள் மனம் வருந்தினார், ஆனால் அவர்களைத் திருத்தமுடியாமல், அவர்களை விட்டு நீங்கிப் பாலர் நாடகச் சபைகளை ஆரம்பித்தார். இது நடிப்புப் பயிற்சியில் அவருக்கு இருந்த உயர்ந்த எண்ணத்தையே காட்டுகின்றது. எனத் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

அவரிடம் —நடிப்புக் கலை பயின்று சிறப்புப் பெற்ற அவ்வை டி. கே. சண்முகம், சுவாமிகளைப் பற்றிப் பின் வருமாறு கூறுவதில் இருந்து அவரின் பெருமை நமக்குப் புலனாகின்றது.

''ஒரு நாடகம் சிறப்பாக அமைய வேண்டுமானால் அந்த நாடகத்தில் பங்கு கொள்ளும் நடிகர்களிடையே ஒழுங்கும், நியதியும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். இதையே சுவாமிகள் காலம் முழுதும் வற்புறுத்தி வந்தார்''

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாக அறிந்து கொண்ட உண்மை. இருந்தும் ஏழ்மை நிறைந்த அவனது இக்கட்டான நிலைமை அவனை அவரிடம் கெஞ்சும்படி வைத்தது.

''ஐயா உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும். மருந்தில்லாட்டில் ஒரு ஐம்பது ரூபா காசெண்டாலும் தாங்கோ. நான் வேறை கடையிலே ஏண்டாலும் வாங்கிறன். இப்ப இந்த மருந்தைக் கொண்டுபோய் குடுக்காட்டில் என்ரை மனிசி தப்பமாட்டாள். என்ரை இரண்டு பிள்ளைகளும் அந்தரிச்சுபோங்கள். உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறன் உங்களைத் தவிர நான் வேறு யாரட்டைப் போறது...'' அவன் அழுதே விட்டான்.

''உன்னுணை சிவசத்தியமா இன்னும் கடையிலே ஒரு பத்து ரூபாவுக்க் கூட வியாபாரம் நடக்கவில்லை. கந்தசாமி டாக்டத்தர் கூட கடன் சொல்லீட்டுத்தான் போனவர்....'' மீண்டும் ஒரு பொய்யை அவிழ்த்து விட்டார் சுந்தரம். முருகேசனும் விடாமல் கெஞ்சினன்.

''உங்களட்டை இல்லாட்டி ஆரட்டை எண்டாலும் வாங்கித் தாருங்கோ ஐயா ஒரு ஐம்பது ரூபா காசு தான்.....''

''அடே இதென்னடா பெரிய தொல்லை. இண்டைக்கு வெள்ளிக்கிழமை அதுவுமா காலங்காத்தாலை ஆரடா கடன் தாறுங்கள்?''

''ஒரு உயிரைக் காப்பாத்துறத்துக்கு வெள்ளிக்கிழமை என்னையா? நீங்கள் மனசு வைச்சால் முடியும் உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறன் .....''

## சிறு கதை

முருகேசனின் கெஞ்சல் சற்று அதிகமாக சுந்தரம் உசாரானார்.

''இதோபார் முருகேசா! நான் கடைசியா சொல்லுறன் இப்ப என்னட்டை மருந்து மில்லை, காசுமில்லை. நீ உதிலை நிக்கிறதாலையும் பிரயோசனமில்லை. அதனாலை நீ நேரத் தோட்டை போய் ஆரட்டை எண்டாலும் கேட்டுப்பார்....''

முருகேசன் ஆற்றாமையோடு கடையை விட்டு வெளியே வந்தான். அவனுக்கு உலகமே இருண்டு விட்டதைப் போலிருந்தது.

ஒரு ஐம்பது ரூபா பணத்தில் ஒரு மனித உயிர் ஊசலாடுகின்றது இன்னும் கொஞ்ச நேரத்துக்குள் அந்த ஐம்பது ரூபா கிடைத்தால் அதைக் காப்பாற்றி விடலாம். இல்லாவிட்டால்..........

'சரி சொந்தக் காரர்களிடமாவது கேட்டுப் பார்ப்பம்' என்கின்ற நப்பாசையில் ஊருக்கு வந்த முருகேசன் நேராக கதிர்காமு பெரியப்பா வீட்டிற்குச் சென்றான். அவனுயா விருந்தாளியாக அவனை வரவேற்றார் அவர்.

''என்னடா தம்பி எப்பிடிக் கிடக்கு இப்ப பொடிச்சிக்கு''

''என்ன அப்படித் தான் கிடக்கு பெரியப்பா. இப் உடனே இரண்டு ஊசி மருந்து கடையிலை எடுத்து ஏத்தவேணுமாம். அதுக்கு ஐம்பது ரூபா வேணும். என்ரை கடை முதலாளியை கேட்டுப் பாத்தன் அவர் இல்லையெண்டிட்டார் இப்ப என்ன செய்யிறதெண்டு தான் தெரியேல்லை. உங்களட்டைக் கிடந்தால் இந்த மாதச் சம்பளம் எடுத்துப்போட்டுத் தாறன்''

இப்ப நான் ஐம்பது ரூபாவுக்கு எங்கையடா போறது தம்பி. நீ முந்தி பிள்ளைப் பெறுவுக்கு வேண்டின காசும் இன்னும் தரயில்லை. பெரியம்மா சீடந்தாலும் தராள். நீ நில்லாமல் போய் ஒருக்கால் உவள் கனகத்தைக் கேட்டுப் பார். அவள் நேற்றுத்தான் மிளகாய் வித்தவள்'' என்றவாறு அவனை கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக கனகம் மாமியைச் சாட்டி வெளியே அனுப்பிவிட்டு, 'தான் வீட்டில் இருந்தால் அவன் திரும்பி வந்தாலும் வருவான்' என்று எண்ணித் தானும் வெளியே நடையைக் கட்டினார் அந்தப் பெரியப்பா.

முருகேசனும் வேறு வழியில்லாமல் பெரியப்பா சொன்ன கனகம் மாமி, மற்றும் உறவினர்கள் எல்லோரையும் கேட்டுப் பார்த்து விட்டான். ஒவ்வொருவரும் ஒவ்வொருசாட்டுக்கள். எல்லோரும் கையை விரித்துவிட்டார்கள். வீட்டில் நகைநட்டு ஏதாவது இருந்தாலாவது அடைவுவைக்கலாம். ஒன்றுக்குமே வழியில்லை.

நேரம் பன்னிரண்டைத் தாண்டிவிட்டது. முருகேசன் ஆற்றாமையோடு ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

அங்கே.....

அந்த அவசர சிகிச்சைப் பிரிவு வாட்டிலே.....

வெள்ளைத் துணிப் போர்வைக்குள்ளே.....

மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தாள் அவனது மனைவி.

அவன் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்துவிட்டான். அவன் அழவில்லை; ஆனாலும் கண்ணீர் வந்து கண்களில் தேங்கி நின்றது.

அவனுய் —அவனது ஆத்மாவாய் —அவனுக்குரியவளாய் —அவனுடைய இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாய் வாழ்ந்த ஓர் உத்தமியை —ஒரு மனித உயிரை —ஓர் ஐம்பது ரூபாக் காசு இல்லாதபடியால் அவனால் காப்பாற்ற முடியவில்லையே;

இனி..... அவளது உயிரற்ற உடலை எடுத்துச் சென்றதும், ஆபத்தில் கைவிரித்த இந்த உற்றார் உறவினர்கள் எல்லாம் துக்கம் விசாரிக்க வரத்தான் போகிறார்கள்! ஒப்பாரிவைத்து அழத்தான் போகிறார்கள்! ஆனால் இறந்துபோன மனித உயிர் மீண்டும் திரும்பி வரப் போகிறதா—?

.....ஆபத்து நேரத்திலுங்கூட பணத்தைப் பெரிதாக மதித்து உதவ மறுத்த பெரியப்பா கதிர்காமர் போன்றவர்கள்.....

.....உயிர் காக்கும் அவசர மருந்துகளைக்கூட அற்ப பணத்திற்காக ஆஸ்பத்திரியிலிருந்து திருட்டுத்தனமாக எடுத்து வந்து கடைக்காரர்களுக்கு விற்கும் பொறுப்பற்ற ஆஸ்பத்திரி ஊழியர்கள்.....

.....இந்த அவசர உயிர்க்காப்பு மருந்துகளை, ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்துப் பெற்று, பதுக்கி வைத்துக் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் சுந்தரம் முதலாளியைப் போன்ற ஈவிரக்கமற்ற பெரிய மனிதர்கள்...!

ஓ! இவர்கள் எல்லாம் மனிதர்கள்தானா.....?!

(யாவும் கற்பனை)

### நரகம் நகரத்திலே...!

மழையிலும் குளிரிலும்-
நனைந்து ஒடுங்கி-
ஒட்டிய வயிற்றோடு-
வதியோரங்களில்-
ஒதுங்கும் அவர்கள்-
இறைவனால் வரையப்பட்ட-
கானல் வரி கொண்ட-
கண்ணீர்க் கவிகளோ.....?
கலைந்த ஓவியங்களோ.....?
பாவம்; அவர்களுக்கு-
நரகமே இந்த நகரத்திலே
தான்!

மண்டைதீவு கலைச்செல்வி

### 'சிவகாமி'

வரப்பெற்றோம்.

சஞ்சிகை: சிவகாமி, வெளியீடு: இணுவில் இந்துமகா சபை, ஆசிரியர்: கே. எஸ். ஆனந்தன், விலை: ரூ 2-50.

''பணி புரி பலனை எதிர் பாராதே'' என்ற இணுவில் இந்துமகாசபையின் தாரக மந்திரத்தை ஆசிரியர் துணையாகக்கொண்டு பணியை நிறைவு செய்துள்ளார். சமயப்பணியை முழுமூச்சாகக்கொண்ட, திருமுருக கிருபானந்தவாரியாரின் ''துன்பம் துடைக்க வழி'' சைவப் புலவர் இ. திருநாவுக்கரசு எழுதிய 'அன்னையே பின்னையும் கன்னி'- என்ற கட்டுரை சிவதிபுராணம் என்ற கவிதையையும் பாடல்களையும் வெளியிட்டுள்ளனர். கடந்த கால மணியினை கட்டுரையில் வெளியிட்டு மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளனர்.

அகில உலக ரீதியில் இந்து சமயபீடம் அமையவேண்டுமென சஞ்சிகையில் சுட்டிக் காட்டப்பட்டது வரவேற்கத்தக்கது. ......ஸச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிவானந்தனின் "குத்து வாங்கிய யானை"

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் கடந்த வாரம் யாழினி இலக்கிய வட்டக் கால்கோள் நிகழ்ச்சியும், யாழினி இலக்கிய இதழ் பற்றிய கருத்துப் பரிமாறல்களும் நடந்தன. பல இலக்கிய இதயங்கள் இணைந்து, இதயந் திறந்து உரையாடிய அந்த மாலைப்பொழுது வாழ்க்கையின் பல முனைகளைப் பற்றிய சிந்தனைகளையும், பத்திரிகைத் துறை சம்பந்தமான அனுபவ உண்மைகளையும் அள்ளித் தந்தது.

கால்கோள் அரங்கிற்கு வித்துவான் சி. ஆறுமுகனார் தலைமைதாங்கினார், பல எழுத்தாளர்களும், பெரியோர்களும் இளைஞர்களும் தத்தமது கோணங்களில் குறிப்புக்களை வழங்கினார்கள்.

யாழினி இலக்கிய இதழினைத் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெருநாளில் பொலிவுடன் வெளிக்கொணருவது தொடர்பான அபிப்பிராயங்கள் பகிரப்பட்டு பரிமாறப்பட்டபொழுது புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறிய யானைக்கதை சிறந்த அனுபவ உண்மையாய் அங்குள்ளவர்களுக்கு உறைத்தது.

அவர் சொன்னார்:

"சங்கையில் ஓடும் நீரில் யானைகளைக் குளிப்பாட்டுவதற்கு யானைப்பாகன் அவற்றினைக் கூட்டிக்கொண்டு வருவான். ஓடும் நீரில் விழுந்து படுக்கும்படி அவற்றினைப் பார்த்து ஒரு சத்தம் போடுவான். அந்த யானைகள் நீரின் மேல் படுத்துக்கொள்ளும். பத்துப் பதினைந்து நிமிடங்கள் கழிய, அந்த யானைகளைத் திரும்பிப் படுக்கும்படி கையால் சைகை காட்டி மீண்டும் சத்தம் போடுவான். யானைகள் அந்தச் சத்தத்தைக் கவனிக்காது, நீரின் வருடலால் வரும் இங்கிதத்தில் திளைத்து மகிழ்ந்து, தம்மை மறந்து கிடக்கும். உடனே பாகன் தன் கையில் வைத்திருக்கும் அங்குசத்தால் முன்னுக்குக் கிடக்கும் யானையின் காதில் குத்துவான்.

குத்து வாங்கிய யானை, பெருங் குளறலோடு திரும்பிப் படுத்துக்கொள்ளும். இதனைக் கண்ட மற்ற யானைகளும் உடனே எழுந்து மறுபக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொள்ளும். அந்த யானைகள் வரிசையின் கடைக்கோடியில் கிடக்கும் இருபதாவது குட்டியானையும் முதல் யானையின் நோக்காட்டினை உணர்ந்து திரும்பிப்படுக்கும்.

இதுபோலத்தான் வித்துவான் ஆறுமுகனார் பல ஆண்டுகளுக்கு முன்னால் கலைமதி என்னும் இலக்கிய இதழை நடத்தி ஐயாயிரத்துக்கும் அதிகமாக நட்டப்பட்டு சட்டி சுட்டதடா கைவிட்டதடா என்று இலக்கிய இதழ் நடத்தும் விருப்பத்தையே விட்டுவிட்டார். அந்தக் காலத்து ஐயாயிரம் என்றால் இந்தக்காலத்து இருபதினாயிரம் சமம்.

இலக்கிய இதழ் தொடங்கும் எண்ணத்தோடு ஒரு பெயரும் சூட்டி விளம்பரமும் செய்த நான் வித்துவான் போன்றவர்களின் நிலைமையை அறிந்ததும் திரும்பிப் படுத்துவிட்டேன். அங்குசத்தால் குத்துவாங்காத யானையைப் போல நடந்து கொண்டேன்.

குத்து வாங்கிய யானையின் அனுபவத்தையும் இனிமேல் புதிய இதழ் தொடங்கும் இளைஞர்கள் கருத்தில் வாங்கிக் கொண்டு காரியம் ஆற்றினால் தப்பலாம்" என்றார்.

இலக்கிய வட்டத்தில் கூடியிருந்தவர்களுக்கு புலவரின் கதை பெருவிருந்தாய் சுவைத்தது.

நாக. சாந்தலிங்கம்

# பொய்க்கவில்லை!



"அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளர் ரொனால்ட் றீகனே வெற்றியடைவார்" என வேலணையைச் சேர்ந்த பிரபல எண் விஞ்ஞான சோதிடர் திரு. ஆ. சிவராசா கடந்த 'ஈழநாடு' வாரமலரில் (2-11-1980) எழுதியிருந்தது தெரிந்ததே. அவரது கூற்று உண்மையாகியுள்ளது. இவர் தமிழக சட்டமன்ற தேர்தலிலும் எம். ஜி. ஆர். வெற்றியடைவார் என முன்பு எழுதியது குறிப்பிடத்தக்கது.

# ★ சமய வாழ்க்கையின் சிறந்தவழி!

— உவில்லியம் ஜேம்ஸ்

உவில்லியம் ஜேம்ஸ் அமெரிக்காவில் தோன்றிய மனோதத்துவ ஆன்ம தத்துவ ஆராய்ச்சியில் வல்லுனர். கிழக்கு நாடுகளிலும், மேற்கு நாடுகளிலும் உள்ள பலவிதமான சமயங்களையும் ஆராய்ந்து, 1902ம் ஆண்டில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார். அதன் முகவுரையாக அவர் எழுதியவை இங்கே தரப்பட்டுள்ளன,

(அமெரிக்க சஞ்சிகை ஸ்பேன்)

பல்வேறு மக்கள் கடைப்பிடிக்கும் சமயவாழ்க்கையின் விசேட குணங்களை மிக விரிவான முறையில் தொகுத்துக் கூறினால் அவை பின்வரும் நம்பிக்கைகளை உள்ளடக்கியனவாக இருக்கும்.

1. நமது கண்ணுக்குப் புலனாகும் இந்த உலகம் ஆத்மீகப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும். இந்த உலகம் அப் பிரபஞ்சத்திலிருந்து தனது பிரதான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுகின்றது

2. அந்த உயர்ந்த பிரபஞ்சத்தோடு ஒன்றுபடுவதுதான் நமது உண்மையான முடிவாகும்.

3. பிரார்த்தனை அல்லது உள்ளத்தொடர்பு அந்த ஆத்மா—நீதி.... கடவுளாகவும் இருக்கலாம். உண்மையாக நடைபெறுமானால், ஆத்மசக்தி பெருகிப் பாய்ந்து, மனோதத்துவரீதியிலும் உடலிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது.

சமயம் பின்வரும் மனோதத்துவ விசேட குணங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது.

4. வாழ்க்கைக்கு ஒரு கொடைபோல ஓர் புதிய ஆர்வத்தை உண்டுபண்ணி, சங்கீதத்தினால் ஏற்படும் வசியம் போலவும் வீரத்தையும் ஊக்கத்தையும் நாண்டுவதாக இருக்கும்.

5. ஆபத்தின்மையில் உறுதி சாந்தகுணம் ஏனையோருக்கு அன்பு அருளும் அளிக்கும் சிறப்புடமை.

இந்த விசேட குணங்களை நாம் எழுத்தில் வடிக்கும் பொழுது உணர்ச்சியில் ஆழ்ந்துபோகிறோம். எனது கையெழுத்துப் பிரதியை நான் திருப்பி வாசிக்கும்பொழுது அதிற் காணப்படும் உணர்ச்சிவேகத்தைக்கண்டு திடுக்குற்றுவிடுகிறேன். இவ்வித உணர்ச்சிக்குப்பின் எம்முன் பரந்துகிடக்கும் மிகுதிவேலையில் குறைந்த கவனத்தையே செலுத்தமுடிகிறது.

எனது எழுத்துப் பிரதிகள் ஏற்படுத்தும் உணர்வுகளின் முக்கியத்துவ உண்மை என்னவென்றால் நான் அவற்றைமிகுமிஞ்சிய, அளவற்ற விடயங்களிலிருந்து தெரிந்தெடுத்தேன். நீங்கள் எமது முன்னோர்கள் அபிமானம் அல்லது ஆவேசம் என்று முத்திரை இட்டதற்கு மாறுபாடுள்ளவர்களாயிருந்து எனது பிரதியை வாசித்துக் கொண்டிருந்தால் எனது தெரிவு சில வேளைகளில் குறும்பானது என நினைக்கக் கூடும். அத்துடன் எனது உதாரணங்கள் கடுமையற்றதாக இருக்க வேண்டுமெனவும் நினைப்பீர்கள். நான் இந்தக் கடுமையான உதரணங்களை ஆழ்ந்த அறிவுள்ள முன்னோர்களின் சிந்தனையிலிரு தே எடுத்துள்ளேன் என உங்கட்குக் கூறிவைக்றேன்.

எந்த ஒரு சாஸ்திரத்தையும் நாம் கற்க வேண்டுமென்றால், நாம் அந்தச் சாஸ்திர வல்லுனரிடம் செல்லவேண்டும். அவர்கள் திடசித்தமில்லாதவர்களாயிருக்கலாம், அதற்காக நாம் சாதாரண மக்களிடம் போக முடியாது. அவர்களின் கூற்றை எமது சிந்தனையுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். இறுதி முடிவு சுதந்திரமாயிருக்க வேண்டும். அதன் அடிப்படை முக்கிய உதாரணங்களைத் தேடும் நாம் இப்போ நம்பத்தகுந்த விதமாக விடயங்களை அறிந்து கொண்டோம் என நம்பலாம். நாம் ஒவ்வொருவரும் பிரதானமாக மறுமொழி கூற வேண்டிய கேள்வி ஒன்று உண்டு. அதாவது வாழ்க்கையின் இந்த மூலதத்துவத்தில் என்ன ஆபத்துக்கள் உள்ளன? அவை என்ன அளவுமுறையில் ஏனைய நிலைகளினால் சமன்படுத்தப்படுகின்றன.

இந்தக் கேள்வி மற்றுமோர் கேள்வியையும் எழுப்புகிறது. அந்தக் கேள்வி பலமுறை நமக்குத் தொல்லை கொடுத்துள்ளது. உடனே அக்கேள்விக்குப் பதில் அளித்து அதன் தடையை நீக்கிவிடுகிறேன்.

'எல்லா மனிதரின் சமயக் கலவைகளும் மற்ற அமைவுகளுடன் பொருத்தமுள்ளன என ஏற்றுக்கொள்ள முடியுமா? அல்லது எல்லா மனிதருடைய வாழ்க்கையும் பொருத்தமுள்ள சமய அமைவு உடையனவா? மறு விதமாக பார்த்தால் பலவிதமான மதப் பிரிவுகள் கோட்பாடுகள், உலகில் இருப்பது கவலைப்படக் கூடியதா?

இக் கேள்விகளுக்கு 'இல்லை' என்ற ஒரே பதிலை அழுத்தமாகக் கூறுவேன். அதற்குரிய நியாயம் இதுதான். படைப்பில் பலவித நிலையில் உள்ள, பலவித குணங்கள், பலவித ஆற்றல் கொண்ட மக்கள் ஒரே வித முறையையும், ஒரே விதமான கடமைகளையும் பின்பற்றுவர்கள் எனக்கூற முடியாது. நம்மில் இருவருக்குஒரே விதகஷ்டங்கள்ஏற்படுத்துவதாகக் கூறமுடியாது அல்லது நம்மில் இருவர் ஒரே வழியைப் பின்பற்றுவதும் இல்லை ஒவ்வொருவரும் ஒரு விசேட சோணத்திலிருந்து நோக்கி, ஒவ்வொரு நிகழ்ச்சி அவற்றால் ஏற்படும் பலாபலன் இவற்றோடு தனிப்பட்ட முறையில் பங்குகொள்ள வேண்டியுள்ளது.

ஒருவன் தன்னை மென்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

# பிடியுங்கள் அந்த நாலு பேரையும்!

எப்படியும் சல்லடை போட்டாவது இந்த நாலு பேரையும்பிடித்துவிடவேண்டுமென்ற ஆதங்கத்தில் இப்போது நாலுநாளாக நாயாக அலைகிறேன்.

"இந்தாளுக்கு நாலுநாளாக என்ன வந்தது? நாலுபேரைப் போல வேலைவெட்டிக்குப் போகாமல்..... நாலுமுழத்துண்டுடன் நாலு றோட்டும சுற்றுகிறாரே.....!"

இந்த நாலுபேரையும் மனைவி அடிக்கடி உதாரணம் காட்டிப் பேசுவதால்தான் இந்த நாலுநாளாக நாலு நாலுதெருவால் நரி அலைச்சல் போடுகிறேன்.

—"நாலுபேரைப் போல நாங்கள் வாழவேணும்,
—நாலுபேரைப்போல நாங்கள் உடுக்கவேணும்,
—நாலுபேரைப்போல நாங்கள் உண்ணவேணும்.

சே! இந்த நாலுபேரால் நான் படும் நரகவேதனை! அந்த நாலுபேர்களின் ஊர் பெயர்களைச் சொல்லுகிறாளா.....? கேட்டால் முழியைப்போட்டு உறுட்டுகிறாள். அந்த விலாசமில்லாதவர்கள் எப்படியாவதுவாழ்ந்துவிட்டுப் போகட்டுமே..... இவளுக்கு என்னவந்தது?

இந்த நாலுபேர்களைப்பற்றி நானும் நாலுபேர்களிடம் விசாரித்துப் பார்த்தேன். அந்தநாலுபேர்களுமே "தெரியது" எனக் கையை விரித்துவிட்டார்கள்!

இந்த நாலுபேர்களையும் சந்தித்து எப்படி உண்ணுகிறார்கள்? எப்படி உறங்குகிறார்கள் என்று பார்க்காவிட்டால் எனக்கு உறக்கமே வரமறுக்கிறது.

ஒருநாள் இந்த நாலுபேர்களைபற்றியும் பொலீசில் ஒரு முறைப்பாடு கொடுத்து

- குமார் தனபால் -

வைப்போம் என்ற எண்ணத்தில் விசாரணை ஸ்தலம்நோக்கி நடந்தேன். முறைப்பாடு கொடுத்தாகிவிட்டது. நாலுபேர்களின் முகவரிகளைக் கேட்டார்கள்..... என் மூஞ்சி முக்கோணமாகியது.

"என்ன........... பெட்டீசம் எழுத பொலிஸ் ஸ்ரேசனுக்கா வாறது? போங்காணும்வெளியலை..............." நல்லகாலம். "போங்காணும் உள்ளுக்கு" என்றிருந்தால் என் நிலை?

பிணை எடுக்க யாரிடம் யாசிப்பேன்.......... என்னை நம்பியார் பிணைநிற்கப்போகிறார்கள்?

சரி, போனதெல்லாம் போகட்டும் இந்த நாலுபேர்களைப் பற்றி பத்திரிகையில் நாலுவரி விளம்பரம் கொடுத்து ........... கையோடு பிடித்துத்தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் பத்திரிகையாலயம் சென்றேன்.

"ஊரென்ன? பேரென்ன? உயரம், நிறம், உடை, எடை இவைகளை விடுத்து விடுத்துக் கேட்டார்கள். நான் விறுக்கென வெளிநடப்புச் செய்துவிட்டேன்.

எங்கெல்லாமோ அலைந்துவிட்டு இரவு பத்துமணிக்கு வீட்டுக்குச் சென்றேன்.

"நாலுபேரைப்போல நேரத்தோடை வீட்டை வருவமெண்டு நினைக்கிறியளே........! மனைவிதான் புறுபுறுத்தாள்.

இரக்கமுள்ள வாசகர்களே! இத்தால் உங்களிடம் வேண்டிக்கொள்வது யாதெனில் அந்த நாலுபேரைப் பற்றி நாலுவிஷயம் தெரிந்திருந்தால்........ காட்டிக் காட்டிப் போட்டு உதவுங்கள் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

# "கடி எறும்பு" கட்டுரைக்கு ஒரு பாராட்டு

26-1080 வாரமலரில் வெளியான 'கடிஎறும்புக் குடியிருப்பின் மீது படையெடுப்பு' என்ற நகைச்சுவைக் கட்டுரையை ரசித்துப் படித்தேன். இப்படியான நகைச்சுவைக் கட்டுரை எழுதுபவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்களா? உண்மையிலே நான் பூரிப் படைகிறேன்.

....விறகின் அடிப் பகுதியில் உலவிய பல வீரர்கள், விறகு புரட்டப்பட்டதால் மேற்பகுதிக்கு மாற்றப்பட்டனர். இந்தப் புரட்சியின் போது துருப்பினர் சிலர் ஆங்காங்கே உதிர்ந்து விறகினுள் விழுந்தனர் அவர்களும் அந்த இடங்களிலேயே ரோந்துக் காவல்புரியுமாறு கேட்கப்பட்டனர்.....போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் நளினமான நகைச்சுவையின் உச்சிக்கு அழைத்துச் சென்றன. வீண் வார்த்தைப் பிரயோகமின்றி, அலட்டிக் கொள்ளாமல் ஆசிரியர் அற்புதமாய் எழுதியுள்ளார். இறுதியில் வழக்கத்திற்கு மாறாக எறும்புப் படையினர் வெற்றி பெற்றதாய் முடித்திருப்பின் இன்னமும் சிறப்பாய்இருக்கும். சபாஷ்! ஆர் எம்.சிருபாகரன். மனம் நிறைந்த வாழ்த்துக்கள். தொடர்ந்து எழுதுங்கள்,

வடகோவை. வரதராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
நீதி
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். —லதா
உலகம் சுற்றும் வாலிபன்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சாவித்திரி - ஜெய்சங்கர்
ஜக்கம்மா

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Peter Cushing in
Dr. Who and the Daleks
(Scope-Color)
12-11-80 முதல் ஒரே வானம் ஒரே பூமி

அநேக இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
இதுவரை பார்க்காதவர்களுக்கு இது அரிய வாய்ப்பு!
சாந்தி யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
நீ யா? வெள்ளிவிழா வண்ணச்சித்திரம்

வெற்றி முழக்கமிடும் 6-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி. எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

75-வது நாளைநோக்கி விறுநடைபோடுகிறது
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 7-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

WINDSOR
(JAFFNA) DAILY 5 SHOWS
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00&9-30P.M.only

தான் செய்யாத குற்றத்திற்காக மெக்சிக்கோ சிறையில் 28 வருடங்கள் வாழ்கிருன் ஒரு கணவன். கணவனைச் சிறைக்கு அனுப்பியது பேரனுரின் சூழ்ச்சி என்பதை மனைவி உணர்கிருள், அன்பும், பண்பும் பதிபக்தியும் நிரம்பிய மனைவி தியாகங்கள் பல புரிகிருள். இருந்தும் வீரதீரசூரன் புரொண்சன் ஒருவனுல் மாத்திரம் அவனை மீட்க முடிகிறது.

CHARLES BRONSON' ROBERT DUVALL,
JILL IRELAND
in
"BREAK OUT"
Jailed for a crime he never committed - Only Charles Bronson can get him out!
Adults. Color Action.

## சமய வாழ்க்கை...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொருவன் தன்னைக் கடுமைப்படுத்திக்கொள்ள வேண்டும். தனது அப்போதைய நிலைக்குத் தக்கதாக அவன் செயல்படவேண்டும். மனிதனின் தெய்வீக உணர்வு சகித்தல் அல்லது பொறுத்தலாகும். தெய்வீகம் என்பது ஒரு தனிப்பட்ட இயல்பல்ல. அது பலவித இயல்புகளின் கூட்டமாகும். அவை யாவும் உபகாரத் தன்மை நிறைந்தவை. பலவித தன்மையுள்ள மனிதர்கள் யாவரும் தெய்வீகத்தை விலைமதிப்புள்ள தொடர்பாகக் கண்டுள்ளார்கள். ஒவ்வொரு மனிதனின் மனப்பாங்கும் மனித இயற்கை முழுவதிலும் ஒரு அசையாகும். தெய்வீகம் எங்கள் முழுக் கருத்தையும் வெளியில் சொல்லவைக்கிறது. எனவேதான் பேரின்பத் தேவதை ஒருவித மக்களுக்குக் கடவுளாகிறது சமாதானம், மோட்ச வீடு என்பனவற்றைத் தரும் தெய்வம் மற்றொரு சாராரின் கடவுளாகிறது. நாம் முழுமையான ஒழுங்கு முறையில் வாழவில்லை. ஒரு பகுதியான முறையிலே வாழ்கிறோம் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். அந்தப் பகுதிகள் ஆத்மீக வாழ்வில் பண்டமாற்றுச் செய்யமுடியாதவை. நாம் சிடுசிடுப்புள்ளவர்களாகவும். பொறுமையுள்ளவர்களாகவும் இருந்தால் அழிவுதான் சமயப்படி உரிய நிலையாகும். நாம் முதலில் இருந்தே நல்லவர்களாகவும், இரக்கம் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென ஒருவர் ஏன் விரும்பவேண்டும். நாம் நேர்மையுள்ளவர்களாய் இருந்தால், ரட்சிப்பு அளிக்கவல்ல ஒரு சமயத்தை விரும்புகின்றோம். நாம் சுக மனமுடையவர்களாய் இருந்தால் ரட்சிப்பைப் பற்றி ஏன் சிந்திக்கின்றோம்,

இந்தச் சமுதாய சம்பந்தமான உலகில் சந்தேகமில்லாமல் சிலர் பூரண அனுபவத்தையும், உயர்ந்த தொழில் விருத்தியையும் உடையவர்களாக இருக்கிறார்கள் எவ்வாறாயினும் ஒவ்வொருவரும் தம் சொந்த அனுபவத்தின்படி வாழவேண்டும். மற்றவர்கள் சகிப்புத் தன்மையுடன் அதற்கு வழிவிடவேண்டும். அதுவே சமய வாழ்க்கையின் சிறந்த வழியாகும்.

— தமிழில் வ. குகசர்மா

## நோயாளருக்கு தீபாவளிப்பரிசு

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கயரோக வைத்தியசாலையின் 120 நோயாளர்களுக்கும் தீபாவளிப்பரிசாக துவாய்கள் வழங்கப்பட்டன. வலி வடக்கு தெற்கு கயரோகத் தடுப்பு அவையின் ஆதரவில் நடந்த இவ்வைபவத்திற்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கமும் துவாய்களை அன்பளிப்புச் செய்திருந்தன.

மேற்படி அவையின் தலைவர் திரு. சோதி பெருமாள் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. எஸ். சிவமகாராசா சுன்னுகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ். முத்துலிங்கம் ஆகியோர் கலந்து நோயாளர்களுக்கு துவாய்களை அன்பளிப்பு செய்தனர் கயரோக தடுப்பு அவையின் உறுப்பினர்களும் இவ்வைபவத்தில் கலந்து துவாய்களை அன்பளிப்பு செய்தனர்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30

## ஆயுர்வேத அமைச்சர் யாழ். வருகிறார்

(பண்டத்தரிப்பு)

ஆயுர்வேத அமைச்சர் டாக்டர் தர்மதாசா அட்டிகல இம்மாதம் 27-ம் திகதியன்று யாழ். மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யவுள்ளார்.

அன்றைய தினம் முற்பகல் அமைச்சர் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையைப் பார்வையிடுவார். அதனைத்தொடர்ந்து அங்கு நடைபெறும் யாழ். மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய அபிவிருத்தி என்னும் விடயம் பற்றிய விசேட மகாநாட்டிலும் அமைச்சர் கலந்து கொள்வார். இம்மகாநாட்டில் யாழ்ப்பாணம் சித்த ஆயுர்வேதக் கல்லூரியை அங்கீகரிப்பது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட அமைச்சர், யாழ். அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட எம். பி.க்கள் மற்றும் வட இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சம்மேளனத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். அமைச்சரை வரவேற்பதற்கான ஒழுங்குகளை வட இலங்கை சித்த ஆயுர் வேத வைத்திய சம்மேளனத்தின் சார்பில் அதன் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, முகாந்திரம் ஈ பி. இராசையா ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

## ரூ. 75,000 நகைக் கொள்ளை: 'உள்வீட்டுப் பிள்ளைகள்' மீது பொலிஸார் விசாரணை

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி நகைக்கொள்ளை தொடர்பாக உள் வீட்டுப் பிள்ளைகள் சிலர் காங்கேசன் துறைப் பொலிசாரால் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த நவரத்தினம் பத்மாவதி என்பவரது வீட்டிலிருந்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கடந்த 30ம் திகதி திருட்டுப்போயிருந்தன. இத்திருட்டு இடம் பெற்றுள்ள விதம் பொலிசாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வீட்டுடன் நெருங்கிய தொடர்புடையவர்களே இதனைச் செய்திருக்கலாம் என்று பொலிசார் கருதுகின்றனர்.

பட்டப்பகலில் பார்வை குறைந்த பெண் ஒருவர் மட்டும் தனித்து இருந்தபோது திருட்டு இடம் பெற்றுள்ளது. ஒரே இடத்தில் இருந்த நகைகளில் ஒருபகுதி திருடப்படவில்லை. திறப்புகள் இருக்கும் இடங்களையறிந்து அவற்றைக் கொண்டு திருட்டை மேற்கொண்டிருக்கிறார்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் சப். இன்ஸ்பெக்டர் திரு. எம். எஸ் சில்வா சந்தேகத்தின் மீது சிலரை விசாரணைக்குட் படுத்தியுள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

## பச்சை விளக்கு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் பிரமீளா இலங்கை வந்திருந்தபோது, மேடைகளிலும், வானொலியிலும் அவரது கச்சேரி அமோகமான வரவேற்பைப் பெற்றது அந்தக் கச்சேரிகளிலே "என்னென்ன விளையாடல் அம்மா....." என்ற பெரியசாமி தூரனின் குந்தலவராளிராகப் பாடலொன்றை அவர் பாடினார்.

அதன் பின்னர், இலங்கையிலே அப்பாடலுக்கு ஒரு 'மவுசு' ஏற்பட்டுவிட்டது!

இசை அரங்குகளில் பாடப்படுகிறது; நடன அமைப்புச் செய்து, பதமாக நாட்டிய அரங்குகளிலே அப்பாடல் அபிநயிக்கப்படுகிறது!

'தமிழகத்தின் பெருமை இன்று உலகமெல்லாம் பரவியிருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் எம். எஸ், சுப்புலட்சுமியினுடைய இசை' என்பார்கள்.

அந்த 'நாதத்தின் உறைவிடத்தை' சர்வதேச அரங்கிலே —சர்வதேசத் தூதராக உணர வைத்ததில் 'கல்கி'யின் பங்கை யார் மறந்துவிடமுடியும்?

அண்மையிலே இலங்கை வந்திருந்த டி. கே. பட்டம்மாளை 'கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில்' சந்தித்தேன்.

வானொலிப் பேட்டிக்காக அருந்ததி சிறிரங்கநாதனும் அங்கிருந்தார்.

அன்னை போன்ற அவர், நம்முன்னே கண்ணீர் உகுத்த போது நமக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை!

சில ஆண்டுகளுக்கு முன்னுல் கச்சேரி ஒன்றில் பாரதியார் பாடல்கள் சிலவற்றைப் பாடிக்கொண்டிருந்தாராம். அப்போது அவையிலே ஒரு பெண் அப்பாடல்களைக் கண்களில் நீர் சொட்டியபடியே முழு நேரமும் கேட்டுக்கொண்டிருந்தாராம்.

மேடையிலிருந்து அதைக் கவனித்தலும், 'ஏதோ மனக் கஷ்டமாக்கும்'' என்று தான் நினைத்துக் கொண்டாராம்.

அப்புறம், கச்சேரி முடிந்த பின்னரும் அந்த அம்மாள் மேடைக்கு வந்து தனது கரங்களைப் பற்றிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாராம்.

"என்னம்மா? உங்களுக்கு என்ன நடந்துவிட்டது? மேடையிலிருந்தும், நீங்கள் அழுதுகொண்டே இருந்ததை நான் கவனித்தேன்'' என்று தான் அவரிடம் ஆதங்கமாகவே கேட்டாராம். அப்போது அங்கு நின்றவர்கள், "இவர்தானம்மா பாரதியாரின் மனைவி'' என்று சொன்னார்களாம்.

அப்பொழுது தன் கண்ணில் இருந்தும் கண்ணீர் சொட்ட ஆரம்பித்து. விட்டது என்று இதைக் கூறியபோதுதான், அந்த நினைவில் நம்முன்னேயும் கண்ணீர்விட்டுவிட்டார் பட்டம்மாள்!

நினைவுத் திரையில் பாரதியாரின் மனைவி செல்லம்மாளையும் அப்போது கண்டிருப்பாரல்லவா பட்டம்மாள்?

பட்டம்மாள் சங்கீதம். அது லஷ்ண சங்கீதம். அதைக் கேட்டு செல்லம்மாள் கண்கள் நீர் சிந்தாது இருந்துவிட முடியுமா, என்ன?

## மாதிரிக் கிராம அமைப்பு வேலைகள்

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியிலுள்ள ஆழியவளை, உடுதுறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் மீனவ மாதிரிக் கிராமங்களின் வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஆழியவளையில் அமைக்கப் பட்டுவரும் மீனவ மாதிரிக் கிராமத்தில் 20 வீடுகளும், உடுத்துறையில் அமைக்கப் பட்டு வரும் மீனவர் கிராமத்தில் 20 வீடுகளும் கட்டப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீடும் ரூபா 14,500 பெறுமதியானவை இவ்வீடுகள் மீனவர்களிடமிருநது விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியானவர்களுக்கு வழங்கப்படும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வனேஸ்ட் நெளிவுள்ள
கூரைத்தகடுகள்
35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்
கதிர் ஹாட்வெயர்ஸ்
(TILLY's GROUP)
11 1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130

# இந்தியாவில்இராணுவஆட்சி?

## ஆஸி-இந்திய உறவில் விரிசல்

சிட்னி, நவ. 8

இந்தியாவில் இராணுவ ஆட்சி ஏற்படலாம் என இந்தியாவிலிருக்கும் ஆஸ்திரேலியத் தூதரகம் ஆஸ்திரேலிய அரசுக்கு இரகசித் தகவல் ஒன்றை அனுப்பியதை அடுத்து இந்திய-ஆஸ்திரேலிய உறவில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளிக்கமுடியாது இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி திண்டாடுகிறார் என்றும் இதனால் அங்கு இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இந்தியாவில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் ஆஸ்திரேலிய அரசுக்குக் கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளதாகவும் இந்தக் கடிதம் பரகசியமானதை அடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

மலிவு விலை விபரம்
கலர் பப்ளின் மீற்றர் 9-50,
கால் சட்டைத் துணி மீற்றர் 10/-
றெயின் கோட்ஸ் மீற்றர் 25/-
மேசை பொலித்தீன் மீற்றர் 2/50
ஸ்டிப் கொலர் 2/-, குரேசெரி
பேசஸ் - 15 சதம், இலாஸ்டிக்
1 மீற்றர் 1/- ரூபா, சிலோபெக்
பொலித்தீன் 30/- ரூபா கிலோ.
சீக்கோ டிரேடர்ஸ்
(உட்புறம்)
13, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

# 'சுவர்ச்சுலோகம் வேண்டாம்!

## குற்றத்தை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டுங்கள்'

### யாழ். மேயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதி சுவர்களில் சுலோகங்கள் தீட்டப்பட்டிருந்ததாக அண்மையில் ஒருதமிழ்ப் பத்திரிகை பிரஸ்தாபித்திருந்தது. சீனாவில் பின்பற்றப்படும் நடைமுறையை யாரோ சிலர் இங்கும் வழக்கில் கொண்டுவர விரும்புகின்றார்கள் போல் தோற்றுகின்றது." இவ்வாறு யாழ். மேயர் ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

திரு. விசுவநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

"தமிழர் வி. கூட்டணியைப் பொறுத்தமட்டில் கைலஞ்சத்தையோ அல்லது ஊழலையோ அநுசரித்துக்கொண்டதுகிடையாது. சுவர் சுலோகம் தீட்டும் அன்பர்களுக்கு இதனை நான் தெளிவாகக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

"வேலை வங்கிப் படிவ விநியோகத்தில் ஊழல் இடம்பெற்றதாக அறியப்பட்டதும் அதனைச் சட்டைசெய்வதாயின் இயக்கம் நீண்டகால உறுப்பினரான சிரேஷ்ட தலைவரையே இழக்க நேரிடலாம் என்று அஞ்சப்பட்ட நேரத்திலுங்கூட, கைலஞ்சம், ஊழல் பற்றி விசாரிக்கவோ அல்லது சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளிக்கவோ தமிழர் விடுதலைக் கூட்டணி அன்றும் பின்வாங்கியதில்லை. இனிமேலும் பின்வாங்கப் போவதில்லை.

"எனவே கைலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் யார் எவர் மீது சுமத்தப்பட்டாலும் அவற்றுக்குப் போதிய ஆதாரம் இருக்குமாயிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் பேரில் விசாரணை நடத்தவோ, குற்றம் நிரூபிக்கப்படும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கவோ கூட்டணி ஒருபோதும் பின்வாங்க மாட்டாது.

"ஆகவே, விஞைகளவர் மீதும் அவரை தூற்றுவதற்குபதிலாக ஏன்என்மீது குற்றமிருப்பினும் கூட, அவற்றை ஆதாரபூர்வமாகத் தலைமைப்பீடத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதே ஒழுங்கானதாகும். சுவர்களில் சுலோகங்கள் தீட்டுபவர்களுக்கு யான் கூறக்கூடியது அதுதான்.

ஒழுங்கான நடைமுறைகள் மூலம் பொது வாழ்வைத் தூய்மைப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள், வசதிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்படுத்தித் தந்திருந்தும் அவ்வழிமுறைகளை நாடாது குருநகர் சுவர்களில் சுலோகங்களைத் தீட்டியிருப்பது யார் மீதோ அரசியல் வஞ்சம் தீர்க்கும் எத்தனமேயல்லாது வேறல்ல என்பதைப் பொது மக்கள் அறிவார்கள். அது குறித்து அதற்கு மேல் யான் எதுவும் கூற வேண்டியிராது என்று நம்புகிறேன்.

# இ. போ. ச. ஊழியர் தெரிவில் புதிய நடைமுறை

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்கு ஊழியர்கள் தெரிவு செய்யப்படும் பொழுது புதிய முறையொன்று கையாளப்பட விருப்பதாகத் தெரியவருகின்றது.

இதன்படி புதிதா ஒரு டிப்போ அமைக்கப்படும்போது 50 வீதமான ஊழியர்கள் அந்த டிப்போ அமைந்துள்ள தொகுதியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார்கள். ஏனைய 50 வீதமும் சுற்றியுள்ள தொகுதிகளிலுள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வாறு ஊழியர்கள் தெரிவு செய்யப்படும் போது முன் கூட்டியே தொகுதி எம். பி.யின் அங்கீகாரம்பெறப்படும்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் அமைக்கப்பட்டதின் பின்னர் இத்திட்டம் முழுமையாக அமுல் செய்யப்படவிருக்கிறது.

## திருட்டுக்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கான ரூபா பெறுமதி மிக்க வெங்கலப் பாத்திரங்கள் உட்படப் பல பொருட்களைத் திருடியதாகக் கொக்குவிலைச் சேர்ந்த பி. ஜெயரத்தினம் என்பவர் மீது ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மேற்கண்ட தண்டனை விதிக்கப்பட்டது. எதிரிக்கு 18 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன் இரண்டு வருடங்களுக்குப் பொலிஸ் கண்காணிப்பில் இருக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். பொலிஸ் தரப்பில் ஆஜரான ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லைன்துரை மேற்படி இந்நபர் இது போன்ற வேறு சில திருட்டுச் சம்பவங்களிலும் ஈடுபட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என்று தெரிவித்ததையடுத்து நீதிபதி பொலிஸ் கண்காணிப்பில் இரு வருடங்களுக்கு இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். (அ

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் 808-வது சீட்டிழுப்பில் பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு.

முதலாம் பரிசு
06 K 0069
ரூ.100,000

இரண்டாம் பரிசு
21 P 0974
ரூ. 40,000

மூன்றாம் பரிசு
11 B 03[illegible]8
ரூ.10,000

தலா 1703 ரூபா 46 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுகள்:-

02 A 0694
05 B 0184
14 B 0117
17 B 0822
05 C 0702
24 C 0633
02 D 0327
23 D 05[illegible]8
10 E 0319
30 E 0[illegible]02
09 F 05[illegible]7
15 F 0363
18 F 0302
07 G 0604
08 G 0191
10 A 0803
11 B 09[illegible]
15 B 0359
05 C 0439
24 C 0438
28 C 0557
22 D 0295
03 E 0965
21 E 0141
01 F 0585
11 F 0698
17 F 0366
26 F 0786
08 G 0151
12 G 06[illegible]6
15 G 0369
25 G 0879
30 G 0282
30 G 0556
12 H 0427
04 J 0378
26 J 0562
33 J 0057
33 K 0355
04 L 0443
06 L 0852
15 M 0579
19 N 0721
07 O 0219
08 P 0211
02 Q 0384
08 Q 0174
16 Q 0370
21 Q 0669
10 R 0[illegible]96
24 R 0300
26 S 0290
33 T 0816
23 G 0933
26 G 0674
30 G 0285
31 G 0307
29 H 0559
07 J 0218
26 J 0608
29 K 0035
03 L 0927
04 L 0511
14 M 0478
11 N 0890
02 O 0187
10 O 0120
10 P 0379
03 Q 00[illegible]6
14 Q 0024
16 Q 0528
33 Q 0427
18 R 0899
28 R 0334
21 T 0343
10 U 0145
10 U 0272
11 U 0793
32 U 0631
27 V 0181
30 V 0[illegible]66
22 W 0525
04 X 0488
07 Y 0288
29 Y 0868
05 Z 0923
11 Z 0366
28 Z 0595
31 U 0266
24 V 0092
27 V 0534
04 W 0[illegible]64
03 X 0748
20 X 0200
23 Y 0600
02 Z 0400
09 Z 0494
12 Z 0661
31 Z 0526
33 Z 0390

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.

ரியூட்டரிக்குசெல்வதாகக்கூறி

# நீந்திவிளையாடச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

(நெல்லியடி)

கல்வி பயிலுவதற்காக ரியூட்டரி செல்வதாகக்கூறி, நண்பர்களுடன் நீந்தி விளையாடச் சென்ற மாணவனொருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமான முறையில் மரணமடைந்துள்ளான்.

இச்சம்பவம் ஒந்தராய்வெளி என்னும் பகுதியில் நடைபெற்றது, அல்வாய் வடக்கு மடத்தடியைச் சேர்ந்த செல்வநாயகம் ஜெபந்தன் என்னும் 17 வயது மாணவனே இறந்தவராவர்.

இம்மரணம் சம்பந்தமான மரண விசாரணை பருத்தித்துறை பதில்நீதவான் திரு. ஜி. வி. சுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. விசாரணையின்போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு.கே. வல்லிபுரம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

மரணவிசாரணையில் காலஞ்சென்ற மாணவனுடன் நீராடச் சென்ற 7 மாணவர்களும் ஆஜர் செய்யப்பட்டனர். மரணவிசாரணைஅதிகாரி மாணவர்களை மிகவும் எச்சரித்துஇது நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

காலஞ்சென்ற மாணவனின் தாயாரான திருமதி செல்வநாயகம் அரியநாயகியும் ஞயகியும் மரணவிசாரணையில் சாட்சியமளித்தார்,

# தென்னாபிரிக்காவை முற்றாக பகிஷ்கரிக்க வற்புறுத்து

## ஐ. நா. விசேஷகுழு தீர்மானம்

நியூயோர்க் நவ. 8.

தென்னாபிரிக்க அரசாங்கத்தை முற்றாகப்பகிஷ்கரிக்க வேண்டுமென சகல நாடுகளையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று இன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின்விசேஷ குழுக் கூட்டத்தில் நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து 91 நாடுகளும் எதிர்த்து 16 நாடுகளும் வாக்களித்தன. 26 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

தென்னாபிரிக்க அரசாங்கம் கறுப்பு இன மக்களை ஒதுக்கிவைத்து கொடுமைப்படுத்தி வருவதைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தில் தென்னாபிரிக்காவை சகல நாடுகளும் முற்றாகப்பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுத்திகரிக்கப்படாத எண்ணெய் வழங்குவதையும் நிறுத்திவிட வேண்டும் என்று இன்னொரு தீர்மானத்தில் இக்குழு கேட்டுள்ளது.

## ஐ. தே. க. கிளை இன்று திறப்புவிழா

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சிக் கிளையை இன்று பிறபகல், யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூன் அங்குரார்ப்பணஞ் செய்துவைப்பார். மாவட்ட அமைச்சர், கட்சியின் காரியாலயத்தையும் திறந்துவைப்பார்:

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு டட்லி குணசேகரா, இயக்குநர் திரு. அலெக்சாண்டர் ஆகியோரும் இவ்வைபவங்களில் கலந்துகொள்வார்கள். (இ)

விற்பனைக்கு

ஐயாயிரம் தொடர் இலக்கமுள்ள சொந்தப் பாவிப்பிலுள்ள மொறிஸ் மைனர் உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு இலறுகாலை 17/2. ஐயனார்கோவில் தெரு. வண்ணார்பண்ணை. 7309

## வண்ணை சிவன் கோவிலில் கந்த சஷ்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி விழாவில் தினமும் காலை சங்காபிஷேகமும்' இரவு சண்முகர்ச்சனையும் நடைபெற்று வருகின்றது.

தினமும் மாலை 5-30 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 'திருப்புகழ்' என்னும் விடயம் பற்றி விரிவுரையாற்றுவார். (கு)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்னை பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கக் கூட்டம், இம் மாதம் 12ந் திகதி மாலை, யாழ்ப்பாணம் இலங்கை வங்கிப் பிராந்திய முகாமையாளர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. திருமதி ரஞ்சி தம்பிராஜா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பல பிரச்னைகள் ஆராயப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்ஸ்டே வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at G.P.O. Sri Lanka under No. QD 8/48/78 Eelanaadu No 49
Grams: Eelanaadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org